தென்மொழி

சிந்திப்பீர் நன்றே!

நாட்டுநலம் மக்கள்நலம் கருதுகின்ற அறிஞர்
நன்றீது தீயதிது என்றெடுத்துச் சொன்னால்,
சூட்டோடு பாய்கின்ற சொற்களென்ற போதும்
சுணங்காமல் அவ்வுரையைக் கேட்டுணர்ந்து கொண்டு
சாட்டுகின்ற குற்றங்கள் குறைகள்தமை நீக்கிச்
சரியான வழிநடக்கும் நல்லரசே வேண்டும்!
ஏட்டிலுள்ள பழந்தமிழர் வரலாற்றை நோக்கின்
இத்தகைய நிகழ்ச்சிகள்தாம் எத்தனையோ உண்டு!

இன்றுநமை ஆளுகின்ற அரசுநிலை காணீர்!
இனியதமிழ்ப் புலவோரைக் கடுஞ்சிறையில் வைக்க
நன்றவர்தாம் செய்தகுற்றம் என்னவெனில் சொல்லும்
நாணயமும் அவர்க்கில்லை, நல்லறிவும் இல்லை!
ஒன்றவரை விடுதலைசெய் என்றாலுங் கேளா(து)
உறுபிணியில் செல்வதற்கும் தடைகிளத்து கின்றார்,
ஒன்றுமட்டும் உறுதியவர் இறுமாப்புக் குலைந்தே
ஓலமிட்டுக் கதறியழும் நாள்நெருங்கிற் றாலோ!

மண்டியிடுங் கடையர்களை மடியமர்த்திக் கொண்டு
மானமுள்ள பெரியோரைச் சான்றோரை மற்றுந்
தண்டமிழ்க்குத் தொண்டுசெயுந் தக்கோரை யெல்லாம்
தனக்குற்ற பெரும்பகையாய்க் கொள்ளும் பார்ப் பாரப்
பெண்டிருக்கும் அரசாட்சி நம்மவருக் காமோ
பெருங்கள்ளி செழிப்பாக வளர்ந்துவிட்ட தாலா
தண்தென்றல் தவழ்கின்ற நிழல்கொடுக்கும்? சற்றே
தன்மானம் உள்ளவர்கள் சிந்திப்பீர் நன்றே!

— இறை.

சுவடி : 26
ஓலை : 12

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை: 3-00

நமக்கு வந்த மடல்கள்.

O : 1528 : அன்புகனிந்த ஐயா அவர்கட்கு, வணக்கம். தங்களின் மடல் கண்டு மகிழ்ந்தேன். சிறைச்சாலையிலும் தங்கள் குறட்பணி தொடரும் செய்தி கேட்டு உள்ளம் சிலிர்த்தேன். சிறைச்சாலையைக் குறள் மணம் கமழும் இலக்கியச் சோலையாக மாற்றிவரும் தங்கள் தவம் வீண் போகாது. தமிழகம் விழிப்புற்று எழ அது வழிவகுக்கும்.

தங்கள் பிணை விடுதலை தொடர்பாக அவ்வப்போது வழக்கறிஞருடன் தொடர்பு கொண்டு வருகிறேன். வேறு பணி இருப்பின் தயங்காமல் தெரியப்படுத்துங்கள்.

—அன்புள்ள பழ. நெடுமாறன், சென்னை 4.

O : 1529 பேரன்புமிக்க ஐயா, வணக்கம். தங்கள் மீதும் மற்றத் தமிழர் நலம் விரும்பிகள் மீதும் 'தடா'வை ஏவிவிட்டுத் தமிழின உணர்வையும், தமிழர் நலனையும் ஒடுக்கப் பார்க்கும் தடாலடி அரசியல்காரர்களின் கொட்டம் இன்னும் எத்தனை நாளைக்கோ? இன்னுமா உறக்கம் இந்தத் தமிழர்க்கு? எப்பொழுது பெறுவார்கள் இன உணர்வு? துடிக்கிறது நெஞ்சம், தூங்கும் தமிழர் நிலைகண்டு! உண்மைத் தமிழ் நெஞ்சங்களின் எண்ணம் நிறைவேறும் காலம் அண்மையில் உள்ளது. வெல்க முயற்சி. வணக்கம் பல. —சித்தலைச்சாத்தன், உ. செல்லூர்.

O : 1530 அன்பார்ந்த ஐயா, வணக்கம். நலம். நலமே விளைக. மணிவிழாக் காணும் தாங்கள் மேலுமொரு மணிவிழாக் காண மனமார வாழ்த்துகிறேன். தாங்கள் எங்கிருந்தாலும் மன அமைதியுடனும் நலத்துடனும் இருப்பீர்கள் என நம்புகிறேன். தங்கள் வாழ்நாள் தமிழினத்தின் வாய்ப்பு நாள். தாங்கள் இதுவரை ஆற்றியுள்ள பணிகள் மிகவும் பாராட்டத் தக்கவை. தொடர்ந்த தங்களின் பணிகளில் நாடும் மொழியும் பல நன்மைகள் பெறும் என்பது உறுதி. தங்களைக் காணும் வாய்ப்புக் கிட்டுமெனில் நேரில் வந்து வாழ்த்துவேன்.

—க. தமிழமல்லன், புதுச்சேரி-9.

O : 1531 பேரன்புடையீர், வணங்குவன் பெரிதும். இத் திங்கள் தென்மொழி கண்டேன்; சிதறினன் மனம்; நொந்தனன் மிக. தண்டமிழ் நாட்டின் பெருமைக்கும் தனித் தமிழுக்கும் மக்களின் நம்பிக்கைக்கும் காலமெலாம் கடுமையாக உழைத்து வரும் பெருஞ்சித்திரனாரின், சிறைபிடிப்பு, தண்டிப்பு, வழக்கு மன்றம் இவைகளையெல்லாம் அறியும்பொழுது, ஏ! தாழ்ந்த தமிழகமே என்றாரே பேரறிஞர் அண்ணா, அதுதான் நினைவுக்கு வருகிறது. தமிழகம் என்று உயர்வு பெறும். பெருஞ்சித்திரனார் போன்றோரின் குறள் தமிழ் ஆயும் நிலை என்று உயரும். தமிழ்த் தாயே உயர்வு கொடு என வாழ்த்தி வேண்டுகிறேன்.

—அ.ம. வேணுகோபாலன், வெங்காலூர்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம்பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[திருவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் விடுதலை அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 26 தி.பி. உ0உச — மேழம் (ஏப்-மே 93) (ஓலை: 12]

அடுத்த தலைமுறையில் தமிழின் நிலை என்ன?

தமிழ் ஒரு புல்லிய மொழியென்றும், அதனையொரு மொழியென்று சொல்லவுங்கூட அறிவுடையவர்கள் வெட்கப்படுவார்கள் என்றும், உருப்படியான ஒரே யொரு நூலேனும் தமிழில் இல்லையென்றும், தமிழ் மக்களெல்லாம் இழிந்த பிறப்பினர்; நாகரிகம் அறியாதவர்கள் என்றும், அவர்கள் கல்வி கற்கவும், கடவுள்வழிபாடு செய்யவும் திருமணம்செய்துகொண்டு முறையாக வாழ்க்கை நடத்தவுங்கூடத் தகுதியற்றவர்கள்; அத்தகுதியைப் பெறவோ-வழங்கப்படவோ உரிமையும் அற்றவர்கள் என்றும் தமிழ் மக்களே நம்பிக் கடைப்பிடிக்கும் அளவிற்கு மிகவும் தந்திரமாகப் பின்னப்பட்டிருந்த சூழ்ச்சி வலையின் வலிய இழைகள் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து நலிவுப்பட்டு ஒவ்வொன்றாக அறுபடத் தொடங்கின;

ஐரோப்பிய அறிஞர்களின் தமிழ்பற்றிய ஆராய்ச்சிகள் பரவத் தொடங்கியதோடு, அதுகாறும் மறக்கவும் மறைக்கவும்பட்டுக் கிடந்த பழந்தமிழ் நூல்கள் பல அறிஞர் பெருமக்களின் அரிய முயற்சிகளால் வெளிக்கொணரப்பட்டு அச்சுநூல் வடிவில் மக்கள் கைகளுக்கு எட்டின.

மெய்ப்பொருளியற் பேரறிஞரும் வரலாற்றியல் வல்லுநரு-மான 'மனோன் மணீயம்' சுந்தரனார் எழுப்பிய குரல் உறங்கிக் கிடந்த தமிழ்மக்களை உசுப்பிவிட்டது. தமிழைப் பற்றி அதற்கு முன் கொள்ளப்பட்டிருந்த எண்ணம் படிப்படியாக மாறத் தொடங்கியது. தமிழர்கள் தாங்கள் யார் என்பதை உணரத் தலைப்பட்டதோடு எதிரிகளை இனங்கண்டு விழ்த்தவும் மன எழுச்சி பெற்றனர்.

இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரைத் தமிழ்க் கழகமும், பின்னர்க் கரந்தைத் தமிழ்க் கழகமும் மற்றும் ஆங்காங்குப் பற்பல தமிழ்க் கழகங்களும் தோற்றுவிக்கப்பட்டுத் தமிழறிவையும் உணர்வையும் பரப்பும் முயற்சிகள் மேற்கொள்-ளப்பட்டன.

பிற மொழிப்பிணிப்பினின்றும் தமிழை விடுவித்து அதனைப் பற்பல துறைகளிலும் பாங்குற வளர்க்கும் பணியையே தம் தவ முயற்சியாக மேற்கொண்ட மறைமலையடிகளார், 'தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையுஞ் செய்யுளு மாகிய இரு வடிவிலும் பல் துறை தழுவி ஐம்பதுக்கு மேற்பட்ட அருநூல் இயற்றி, முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்' தார்.

தமிழை, முறையான பள்ளிகளில் கற்பிக்கும் பாடமொழி யாக்கவும், அதனைப் பல்கலைக் கழகம் வரை உயர்த்தவும் சமற்-கிருதமும் பயின்றவர்களே தமிழ்ப் புலவர் (வித்துவான்) ஆக முடியும் என்றிருந்த நிலையை மாற்றவும் இன்ன பிறவற்றுக்குமாக அவ்வக் காலக்கட்டங்களில் அறிஞர் பெருமக்கள் மேற்கொண்ட போராட்ட முயற்சிகள் பலப்பல.

தேசியமொழி, பொதுமொழி, ஆட்சிமொழி, இணைப்புமொழி என்னும் பெயர்களில் தமிழ்நாட்டில் வலக்காரமாகத் திணிக்கப் படும் இந்தியால் தமிழ் கெடும், தமிழர் வாழ்வுகெடும் என்பதால் அதன் வல்லாண்மையை எதிர்த்து அடுத்தடுத்து மேற்கொள்ளப் பட்ட போராட்டங்கள் எத்துணை ஆற்றல் வாய்ந்தவை! அவை எத்தனை உயிர்களைக் காவு கொண்டன!

தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து வாழ அவர்களுக்குத் தமிழ் உணர்வை ஊட்டவும் தமிழின் பல்வகைச் சிறப்புகளைக் காட்ட-வும், அதன் தலைமையையும் பெருமையையும் நிலைநாட்டவும் பாவேந்தர் பாரதிதாசனாரும், மொழி ஞாயிறு பாவாணரும் மேற்கொண்ட முயற்சிகள் போராட்டங்கள் கொஞ்சமா?

தமிழை வழிபாட்டு மொழியாக்கவும், அறமன்றங்களிலும், ஆட்சி—அலுவலகங்களிலும் இடம்பெறச் செய்யவும், தமிழ் மக்கள் வாழ்வியலின் அனைத்து நிலைகளிலும் தமிழையே கடைப் பிடிக்கச் செய்யவும் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட முயற்சி-களுக்கு அளவுண்டா?

தமிழின் நிலையை உயர்த்தவும் முறையாக வளர்த்து வளப்-படுத்தவும் அடுக்கடுக்கான நூல்களை வெளியிட்டு மக்களிடையே பரப்பும் முயற்சிகளைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முனைந்து மேற்கொண்டது.

தூய தமிழ் வளர்க்கும் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பாவலரேறு பெருஞ்சித்திரனார் கடந்த முப்பதாண்டுக் காலமாகத் தொடர்ந்து முயன்றுவந்திருக்கிறார்; அணியணியாக அறிஞர்களையும் மாணவர்களையும் ஆக்க வழியி-லான தமிழ்ப்பணியில் ஊக்கிய பெருமை 'தென்மொழி'க்கு உண்டு.

இன்று தமிழ்நாட்டில் பதினைந்து பல்கலைக் கழகங்கள் இருக்-கின்றன. (கடந்த இருபத்தைந்தாண்டுகட்கு முன்புவரை இருந்-தவை இரு பல்கலைக் கழகங்களே) 'மனோன் மணீயம்' சுந்தரனார் பெயரிலும், பாவேந்தர் பாரதிதாசனார் பெயரிலும் இன்று பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ளன; ஏன், தமிழுக்கென்று தனியொரு பல்கலைக் கழகமே நிறுவப்பட்டுள்ளது;

பள்ளிகளின் எண்ணிக்கையும், கல்லூரிகளின் எண்ணிக்கை-யும் பற்பல மடங்கு வளர்ந்திருக்கின்றன; தமிழாசிரியர்கள் பேராசிரியர்களின் சம்பளம் பலப்பல மடங்கு உயர்ந்திருக்கின்-றது. தலைமையாசிரியர்களாகவும், கல்லூரி முதல்வர்களாகவும் வாய்ப்புப் பெறும் நிலைக்கு அவர்களின் மதிப்பு உயர்த்தப்பட்டி-ருக்கின்றது. தமிழறிஞர்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர்-களாகும் நிலையையும் எட்டியிருக்கின்றனர்;

தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத்துறை அரசின் சார்பிலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்றவை அரசின் அரவணைப்பிலும் இயங்குகின்றன;

தமிழ் ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டே இருக்கிறார்கள். ஆராய்ச்சிப்பட்டந்தாங்கிகளின் எண்ணிக்கைப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது;

தமிழ்நாட்டிலும் பிறநாடுகளிலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் பல நடத்தப்பட்டுள்ளன; தமிழக அரசின் சார்பில் நடைபெற்ற இருபெரு மாநாடுகள் ஏராளமான பொருட் செலவில் நடத்தப்பட்டிருக்கின்றன!

ஆ! எத்துணை இருந்தும் என்? அந்தோ! தமிழ் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் உயிரோடு உலவ முடியுமா? தமிழ்நாட்டின் நகரங்களிலும் ஊர்களிலும் பட்டி தொட்டி-களிலுமெல்லாம் ஆங்கில வழி மழலையர் பள்ளிகள் கவர்ச்சி-

யாகக் கண்சிமிட்டிக் கற்ருேரையும் மற்ருேரையும் எளிதில் ஈர்க்கின்றன. தாய் மொழிக் கல்வியின் சிறப்பை மணிக்கணக்கில் பேசும் ஆற்றல் படைத்தவர்கள் உட்பட அனைவருமே இப் பள்ளி-களில் தம் பிள்ளைகளைப் படிப்பிப்பதிலும் அளவற்ற ஆர்வங் காட்டுகின்றனர். ஆங்காங்குச் சிற்சிலர் முணுமுணுத்தாலும் அவர்களும் இவ் வீர்ப்பிலிருந்து தப்பிவிட முடியாது! அரசுப் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி பயிற்றும் ஆசிரியர்களே தம் பிள்ளைகளைத் தாம் பணியாற்றும் பள்ளிகளில் படிக்கவைக்க விரும்பாது அவர்களை ஆங்கில வழிப் பள்ளிகளிற் சேர்த்து அழகு பார்க்கின்றனர். தம் பிள்ளைகளை அத்தகைய பள்ளிகளில் சேர்க்க முடியாதவர்கள் கையாலாகாதவர்கள் என்பது முடிவு கட்டப்-பட்டுவிட்டது.

இப் பள்ளிகளில் தமிழின் நிலை என்ன தெரியுமா? மாணவர்-கள் யாரும் ஒரே ஒரு தமிழ்ச் சொல்லைக் கூடத் தப்பித் தவறியும் பேசிவிடக் கூடாது. சென்னை—வேளச்சேரிப் பகுதியில் உள்ள பள்ளியில் வாய்தவறித் தமிழ்ச் சொல் லொன்றைப் பேசிவிட்-டால் அம் மாணவன் ''I won't speak Tamil'' என்றெழுதப் பட்ட அட்டையொன்று கழுத்தில் கட்டப்பட்டு மண்டியிட்ட நிலையில் வகுப்புத் தோறும் சென்றுவரவேண்டும். இஃது அவனுக்குத் தரப்படும் தண்டனை. ஏறத்தாழ நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இதுதான் நிலைமை!

தமிழைப் பற்றிப் பேசுவோரிற் பெரும்பாலோர், தமிழால் வாழ்வோர், வளம் பெற்ருேர் எவரும் பிஞ்சு நெஞ்சங்களில் நஞ்சைப் பரப்பும் இக் கொடுமை குறித்துப் பேசவும் விரும்புவ-தில்லை. இது அரசியலாக்கப்பட முடியாத படுகொலை! ஏனென்ருல் அரசியல்காரர்கள் யாவருமே ஒருமுகமாகத் தம் பிள்ளைகளை இப்பள்ளிகளில்தான் சேர்த்துப் பெருமையுடன் வாழ்கின்றனர்; தமிழ்ப் படுகொலைக்கு உடந்தையாக இருக்கின்றனர்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள், நாடு, உலகம் எல்லாம். எதிர்காலத் தலைமுறையில் தமிழுக்குரிய இடம் என்ன? பாடைக்குச் செய்யும் புனைவுகளும்(அலங்காரங்களும்) பார்ப்பா-னுக்குச் செய்யும் உதவிகளும் சமம் என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பட்டியலில் இன்று தமிழுக்குச் செய்யும் செலவு-களும் சேர்க்கப்பட வேண்டியவைதாமா?

இன்று தமிழால் வருவாயும் மதிப்பும் பல மடங்கு உயர்ந்து வளமாக வாழுகின்றவர்களும் சலிப்பின்றி ஆராய்ந்து கொண்டிருக்கும் அறிஞர் பெருமக்களும் தம்கண்ணுக்கு முன்னரே தமிழ் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இக் கொடுமை குறித்துச் சிந்திப்பார்களா?

—இறை.

தமிழர் எழுச்சிப் பத்து

—பெருஞ்சித்திரனார்—

(1)

முன்னம் பிறந்து சொன்முதிர்ந்து,
மூத்தோர் யாத்த முத்துறைக்கும்
முதலா யிருந்து, முக்கழகம்
முரலா நின்ற முத்தமிழைத்,
தென்னங் குரவர் முடியேற்றித்
திசையெல் லாம்போய் இசைத்தவுரை,
திளைத்தோர் விரும்பித் தீந்தமிழின்
தேறல் மாந்த விரைந்திங்குப்
பின்னம் பயின்றே உளமுவந்து
பேரும் ஊருந் தாமாகிப்
பிழைப்போ டுழைப்பும் நல்கியதன்
பெருஞ்சீர் மடுத்தும் விழியாமே.
இன்னந் துயிலிற் கிடக்கின்றாய்!
எழுவாய் தமிழா! எழுகவே
இளமை முதுமை எண்ணாமல்
இன்றே எழுக! எழுகவே!

(2)

மண்ணும் அரசும் பிறர்க்கீந்து
மணித்தேர் நிறுத்தி வழிநடந்தான்!
மடவோன் ஒருவன் அணிபோர்வை
மயிலுக் கீந்தான் எனுஞ்செயலை,
எண்ணும் போதில் உடல்சிலிர்க்கும்
இருதோள் விம்மும்! கைபுடைக்கும்
இவையுன் பெருமை! இளந்தமிழா,
இன்றுன் நிலைமை நினைக்கரிதால்!
உண்ணும் பொருட்கும் கையேந்தி
உடுக்கும் உடைக்கும் உடல்குனிந்தே,
உறையுள் கெட்டும் வழிகெட்டும்,
உடைமை முற்றும் ஒருங்கிழந்தும்,
கண்ணுங் காதும் பொத்தியிரு
கையுங் காலும் முடங்கினையால்!
களைவாய் தமிழா நெடுந்துயிலும்!
கனன்றே எழுக, எழுகவே!

(3)

கொடுக்குங் கையால் இரந்துண்பாய்
குலையா நெஞ்சில் இருள்கொண்டாய்!
குமரித் துறையின் கரைநின்று
குரலை உயர்த்திப் பெரு வாளை

எடுக்குந் தோள் நின் இரு தோள்கள்!
எதிர்க்கும் மார்புன் மணிமார்பு!
இழந்தாய் முற்றும் இன்றேகாண்;
இனமும் மொழியும் நீமறந்தாய்!
படுக்கும் பாயும் நினதில்லை!
பயிலும் மொழியும் நினதில்லை!
பணிவார்க் கின்று நீ பணிந்தாய்!
பழஞ்சீர் முற்றுங் கனவென்றாய்!
நடுக்குங் குளிரில் துணியின்றி
நனைக்கும் பனியில் துயில்கின்றாய்!
நடவாய் எழுந்தே தமிழா! இந்
நாளே எழுக, எழுகவே!

(4)

ஆர்க்கும் வல்வாய் வழக்கெங்கே?
அரசாள் முரசின் முழக்கெங்கே?
அயலார் எதிர்ப்பின் கனன்றெழுந்தே
அவரே இரப்பின் மடிநிறைய
வார்க்கும் கைநின் இரு கைகள்
வாங்கல் உண்டே, பிறர்தலைகள்!
வளமும் குன்றித் திறங்குன்றி
வறியோன் எனவே வாழ்கின்றாய்!
சேர்க்கும் பொருளும் நினதில்லை!
செலுத்தும் திறையும் நினதில்லை!
சிண்டைப் பிறர்கைத் தந்தாய்நீ;
சிறுகைத் தாளத் திணைந்தாய்நீ!
போர்க்கும் போர்வை இழுத்திழுத்தே
புரள்வாய் எழுக எழுகவே!
பொன்னிப் புனலில் உடல்குளிக்கப்
போவாய் எழுக, எழுகவே!

(5)

அயில்வாய் மதிலும், பெருங்கோயில்,
அணையும், வாழுங் கலைமுற்றும்
அயலார் கண்டே வியப்பெய்த
அமைத்தாய் உன்றன் திறமெங்கே
வெயிலும் மழையும் பாராமல்
வெற்பும் கடலும் பலகடந்து
வெளியார் விரும்பும் வாணிகமும்
விளைத்தாய் உன்றன் விறலெங்கே?
பயிலுங் கல்விப் பயன்முற்றும்
பண்பா டெல்லாந் துறந்தாய்நீ!
பழகுந் தமிழும் மறந்தயலார்
பழிசேர் மொழிக்குந் துணைநின்றாய்!
துயிலும் வருமோ? இளந் தோன்றால்
துள்ளி எழுக எழுகவே!

துலங்கும் உன்றன் பழஞ்சீர்மை
தோன்ற எழுக, எழுகவே!

(6)

பூக்கும் வளங்கள் முறுவலிக்கும்,
புனல்பாய் நாடு நின்னுடு!
பொழிலுங் காவுந் தடவயல்கள்
பொதியும் பயனும் நின்செல்வம்!
தேக்கும் வெதிரும் வான் கமுகும்
தேய்வை,மகிழும், குலைவாழை,
தெங்கும், பனையும், அடர்ந்திருக்கும்
திசைதோய் மலைகள் நின்மலைகள்!
தூக்கும் அலைக்கும் போராடித்
துளைக்கும் நீர்க்குள் புகவாங்கே
துதையும் குவைசேர் சிப்பிக்குள்
தூங்கும் முத்தம் நின்முத்தம்!
காக்குந் திறமும் குன்றியிரு
கண்ணுந் திறவாய் எழுகவே!
கரியும் புலியும் நிகர்க்கின்ற
காளை எழுக, எழுகவே!

(7)

எத்திப் பறிக்கும் பெருங்கூட்டம்
எதிரில் இமையா விழித்திருக்கும்
இமயப் பொருப்பில் கொடிநாட்டி
இருந்தாய் இன்னுந் துயில்கின்ருய்!
குத்திக் கிழிப்பார் நினதுதிறம்!
கூருய்ப் பிரிப்பார் உன்னினத்தை!
கூரை பிரித்தே உள்ளிறங்கிக்
கொள்ளை யிடுவார் ஒருபுறத்தே!
கத்திக் களைப்போன் என்குரலுன்
காதுப் பறையைக் கிழிக்கிலையோ?
கள்ளுண் பித்தன் எனவாகிக்
கடுமைத் துயிலுங் கொணடாய்நீ!
தித்திப் பதுவோ, வல்லடிமை?
தென்னு! எழுக எழுகவே!
தேடாப் பூட்கை மிகக்கொண்ட
திறலாய் எழுக, எழுகவே!

(8)

பேச்சுந் தடுத்தார்! நீமணந்த
பிறங்கும் புகழைப் பொய்யென்ருர்!
பிழையா அரசில் நீவாழ்ந்த
பெருவர லாற்றைக் கதையென்ருர்!
மூச்சுந் தடுப்பார்! உன்னினத்தை
முழுதும் அழிப்பார்! தமிழா,வென்

முழக்கம் நின்றன் முழுச்செவிட்டு
மூளிச் செவியுட் புகவிலையோ?
ஓச்சுங் கைவாள் உடனெடுப்பாய்!
உறைந்த குருதிக்(கு) அனல்காய்வாய்!
உண்டால் உரிமை! அதுவல்லால்
உலையாச் சாவை உடனழைப்பாய்.
ஏக்சுங் கேட்டே உறங்குதியே!
இளமைத் தமிழா எழுகவே!
இறவாப் புகழுக் கிலக்கான
ஏறே! எழுக, எழுகவே!

9

கோட்டுக் களிற்றை முகத்தடக்கிக்
கொடுவாய்ப் புலிக்குப் பல்லெடுத்துக்
குவடுங் காவும் மிதித்தெழுந்த
குலமும் புலமும் நினதன்றே!
காட்டுக் குறத்தி மலைமுகட்டைக்
கயிற்றால் தாவி அடைதேறல்
கையாற் பிழிந்து மக்களிக்கும்
கதையும் வழக்கும் நினதன்றே!
வேட்டுக் குழற்கே அஞ்சுவதோ?
வெற்பா, மலையா, குறவா, உன்
விளையாட் டெல்லாம் போரன்றோ?
வெறுநி நின்தோள் தொடையன்றோ?
மூட்டுக் கொண்ட என்புநிமிர்?
முறுக்கே றட்டும் நின்கைகள்!
மூவா இளமைத் தமிழ்மகனே,
முனைவாய் எழுக எழுகவே!

10

கறங்குக முரசம்! வெண்சங்கம்!
கரடிகை பம்மை உறுமுகவே!
காட்டுப் புலியே! நீவளர்த்த
கன்னித் தமிழ்க்குன் உயிர்செகுப்பாய்!
பிறங்குக நின்பேர்! திறம்பூண்க!
பெரிதோ பிறன்கை வெண் சோறு
பிறந்தாய் அன்றே இறந்தாய்நீ!
பேசா அடிமை வாழ்வதுவோ!
இறங்குக உரிமைத் தனிப்போரில்!
ஏடா! இளமைத் தமிழ்மகனே!
இறப்பினும் சுவையோ இழிவாழ்க்கை?
இருகண் மூடிச் செவிமூடி
உறங்குதல் நன்றோ இதுபோழ்தே!
உணர்வாய் எழுக எழுகவே!
ஒட்டாப் போக்கை உடன்வெட்டி
உகுப்பாய்! எழுக, எழுகவே!

-1961.

பெருஞ்சித்திரனாரின் "கனிச்சாறு" அடிப்படைகளை நோக்கி..

1948 முதல் பெருஞ்சித்திரனார் எழுதிய பாடல்கள் இதழ்களில் வெளிவந்து இதுவரை நூல்வடிவம் பெறாதவை தற்போது "கனிச்சாறு" என்ற பெயரில் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இத் தொகுதிகளில் தமிழ், தமிழ்நாடு, நாட்டு விடுதலை, பொதுமை, இயற்கை, காதல், இறையுணர்வு முதலிய பல்வேறு பொருள்களில் 598 பாடல்கள் அடங்கியுள்ளன. இனிய எளிய தனித்தமிழில் புனையப்பட்டவை இவை. சந்தங்கள் இப் பாக்களுக்கு இனிமை சேர்க்கின்றன. கற்பனை நயம் இவற்றில் குறைவு. பெரும்பாலான பாடல்கள் கருத்துப் பரப்பல் கருதியவை. ஆகவே தனமாற்றம் பெறாதவை. உணர்ச்சியூட்டுதல் இவ்வகைப் பாடல்களின் நோக்கம். இம் முறையில் சில கருத்துகள் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் சிற்சில பாடல்களே நெஞ்சில் நிற்க வல்லயாத் தரத்தோடு விளங்குகின்றன. குறிப்பாக முதல் தொகுதியில் "செந்தமிழ்ப்பாவை' 'சிறைப்புக்க காதை'' அடிமை வாழ்வுதைத்தனை நான்", மூன்றாம் தொகுதியில் 'திருக்குறள் பெருமாள்", "துன்பமும் இன்பமும்' முதலியவை.

பல்வேறு சூழல்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது பெருஞ்சித்திரனார் கருத்துகளின் அடிப்படைகளும் அவற்றின் போதாமையும் தெளிவுபடுகின்றன. இது பற்றிய ஆய்வுதான் இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழ், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு, தமிழ்நாட்டு விடுதலை முதலியவற்றில் பெருஞ்சித்திரனார் கொண்டுள்ள ஈடுபாடு நாடு அறிந்ததே. தமிழ் இனம் பழங்காலத்தில் பெருமையோடு விளங்கியது போலவே இன்றும் எதிர்காலத்திலும் விளங்கவேண்டும் என்பதே அவரது பேராவல். கழகப் பெருமை, மூவேந்தர் காலப் பெருமை, ஆரியர் வருகையைத் தொடர்ந்து மொழியும் பண்பாடும் சீர்குலைந்தமை இவை இக்காலத்திலும் தொடர்தல் முதலியவற்றைப் பெரும்பாலான பாடல்கள் உணர்ச்சியோடு சொல்கின்றன. இடையிடையே சில பாடல்கள் வேறுபட்ட குரலில் ஒலிக்கின்றன.

மூவேந்தர்கள் எங்கள் பாட்டன்மார்கள்: அவர்கள் பெருமையை இன்று பேசுவோரை யார் மதிப்பார்? (தொகுதி ... 1) பாரி என்றும் ஓரி என்றும் பழம் பெருமை பேசுவதால் பயன் இல்லை. நக்கீரனின் துணிவு பற்றிப் போற்றுவதல்லாமல் இன்று அவர் வீரத்துணிவு இல்லை. (2-47) மூவேந்தர்கள் ஒற்றுமையோடா வாழ்ந்தார்கள்? பகைவர் மனைவியரின் மானத்தை அவர்கள் சீர்குலைக்கவில்லையா? தமிழ்ப் புலவர்களை அவர்கள் மதித்தார்களா? துறவியர் அறிவுரையைக் கேட்டார்களா? சமணர்களுக்குக் கொடுமை செய்யவில்லையா? (1-131, 132) ஆரியன் என்னைத் தாழ்த்தினான் ஆயிரம் ஆண்டுகள் வீழ்த்தினான் என்றல்

யாரிதை நம்புவார்கள்? உன்னையே நீ அடிமை செய்தாய். (1-30) தமிழ்நாட்டைப் பிறர் யாரும் ஆளவில்லை. இந்தத் தமிழனே அடிமை தந்தான்.(1-119) திருக்குறளுக்கு இன்று விழாவெடுத்து என்ன பயன்? உயர்வு தாழ்வு ஒழிந்ததா? பசியும் பிணியும் ஒழிந்தனவா? (3-151) தமிழ் வாழ்க என்பதனால் தமிழ் வாழாது. தமிழ்ப் பெயரை வைப்பதிலும் தமிழ் வாழாது. பட்டிமன்றம் பாட்டரங்கம் வைப்பதனாலும் தமிழ் வாழாது, உலகத் தமிழ் மாநாடு நடத்துவதனாலும் தமிழ் வாழாது(1.22). இவ்வாறு பல பாடல்களில் கூர்மையான கேள்விகள் கேட்கப்படுகின்றன.

தமிழ்ப் பெருமை, தமிழினப் பெருமை பேசும் பெரும்பாலான பாடல்களுக்கிடையில், இப்பாடல்கள் பெருஞ்சித்திரனாரின் உண்மைத் தேட்டத்தை மட்டுமல்லாமல் அவருக்குள்ளேயே முரண்பட்டு, ஒரு புதிய பாய்ச்சல் பெறுமல் தவிக்கும் அவரது மனநிலையைக் காட்டுகின்றன. இக்கேள்விகளுக்குள் ஆழ்ந்திருக்கும் பொருளை உண்மைத் தேட்டம் தீவிரப்பட்ட நிலையில், அவர் புரிந்துகொண்டால் அவரது சிந்தனையில் ஒருபாய்ச்சல் நிகழ முடியும்.

ஆரியர் எவ்வளவுதான் சிந்தனை வலிமை, தீயசூழ்ச்சி மிக்கவராக இருந்தபோதிலும் தமிழன் இடம் தராமல் அவர்கள் இங்கு மேன்மை பெற்றிருக்க முடியாது. தமிழன் இடம் தந்ததற்கான தேவை என்ன? இடம் தந்த தமிழர்கள் யாவர்? தீவிர சாதி, சமயங்கள், தொன்மங்கள்முதலியவை ஆரியன் மட்டுமேகொண்டு வந்தவையா? இவற்றின் தோற்றத்திலும் பெருக்கத்திலும் தமிழனுக்குப் பங்கில்லையா? பாரி முதலியவர்களைக் கொன்று ஒழித்தவர்கள் யார்? வேற்று நாட்டவனை, வேறுபட்ட நாகரிகமும் பண்பாடும் உடையவனை இங்கு வரவேற்றவர் வாழ்வளித்தவர் யாவர்? ஏற்கனவே இங்கு வளர்ந்திருந்த ஆளுமை ஆற்றல்கள் அல்லவா இவர்கள்! ஆளுமை புரிந்தவர்கள், ஆளுமையால் தாக்குண்டவர்கள் இருவரையும் தமிழர் என்ற ஒரே பகுப்பில் அடக்குவது என்ன ஞாயம்? சாதி சமய வேறுபாடுகள்—அவை என்ன காரணத்தோடு ஏற்பட்டிருந்த போதிலும்—ஆளுமையரின் நலன்களுக்கல்லவா பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. இன்றும் இவற்றைப் பயன்படுத்திக் கொள்பவர் ஆளுமையர் அல்லரோ! ஒரு நாட்டின் பண்பாட்டை, மேன்மையைச் சிதைப்பவர்கள் இந்த ஆளுமை ஆற்றல்கள்தாம். உண்மையான வரலாற்றுப் பார்வை என்பது இதுதான். மார்க்சு கற்றுத் தந்த வரலாற்றுப் பார்வை இது. "முந்தை வரலாறு"(1-22) கற்கும் முறை இது தான். "மார்க்சு கண்ட பொதுமையைத் தமிழன் முன்பே கண்டான்".(1-141) என்று பெருஞ்சித்திரனார் கூறுவது, போதாது, வகுப்புப் போராட்டத்தில் நடுவங்கொள்வது மார்க்சின் பார்வை. பெருஞ்சித்திரனாரிடம் இடம் பெற்றுள்ள மாறுபாடான கருத்துகள் இப்பார்வையிலிருந்தே புரிந்து கொள்ளத்தக்கவை.

தற்காலத்தில் தமிழக மக்கள் அடைந்துள்ள வீழ்ச்சியைப் பல பாடல்களில் உருக்கத்தோடு விளக்குகிருர், ''சட்டமும் திட்டமும் பற்பல செய்தார். சாலைகள் சோலைகள் ஆலைகள் செய்தார். கட்டிய அணைகளால் நீரையும் வளைத்தார்; கழனிகள் ஆயிரம் விளைந்திடச் செய்வார். ஒட்டிய வயிற்ருேடு உலா வருகின்ற உயிர்வாழ் கூடுகள் வாழ என் செய்தார்?''(2-70) ''சோற்றுக்கு மடிவிரிக்கும் புலவர் கூட்டம், சுரண்டுகின்ற வணிகர்கள் அடிக்கும் கொள்ளை, பழம் விளக்குமாற்றுக்குக் குஞ்சம் எனப் பதவி,பட்டம், பகற்கொள்ளை, கலைக் கொலைகள்-பொய் உரைக்கும் உலுத்த அரசியல் வாழ்க்கை'' (1-151); ''கல்வித்துறையில் காவல்துறையில், வாணிகத்தில், கோயில் மடங்கள் என்னும் நற்பெயரில் கொள்ளையிடும் திருட்டுக் கூட்டம்''(1-156).

''புதிய புதிய அரசுகள் வந்தன; புதிய புதிய கொடிகள் பறந்தன; ஏழைகள் நிலையில் மருந்துக்காகிலும் மாற்றங்கள் இல்லை'' (2-53)

இவற்ருேடு, துண்டுகளையும் தொண்டர்களையும் பதவி இன்பத்தில் கொள்கை மறந்த தமிழகத் தலைவர்களையும் தமிழக மக்களின் விடுதலையைக் கைவிட்ட தலைவர்களையும் சாடுகிருர்; பதவிகள் எதற்கு? ஊருக்கு உழைக்கவா? தம்மை வளர்க்கவா? (2-77)என்றெல்லாம் கேட்கிருர்;

இவை பெரும்பாலும் பெருஞ்சித்திரனாரிடம் கேள்விகளாகவே உள்ளன. இக்கேள்விகளால் இவர் துயரப்படுத்துவதைப் பல பாடல்கள் தெரிவிக்கின்றன. அரசியல் முதலிய துறைகளில் உள்ள சீர்கேடுகள், பண்பாடு பற்றிய சிக்கல்கள் அல்ல; நாம் தமிழர்கள் என்ற உணர்வைப் பெறுவதால் இவை தீரப்போவதில்லை. இவர் காணும் சிக்கல்களுக்கிடையில் மின்னுகின்ற உண்மை, வகுப்புப் போராட்டத்தினிடையில் நாம் இருக்கிருேம் என்பதுதான். ஆலைகள், அணைகள் யாருக்காகக் கட்டப்படுகின்றன? பதவிகள் எதற்காக? கொடிகளும் கோலங்களும் ஏன் மாறுகின்றன? ஏழைகளை—உழைப்பாளிகளைச் சுரண்டித்தான் மேலும் சுரண்டத்தான் இவை உருவாகின்றன; தாளிகைகளும் திரைப்படங்களும் இதனையே செய்கின்றன; இந்தி வருகையும், இந்தி எதிர்ப்புப் புனைவுகளும், உலகத் தமிழ் மாநாடுகளும் இதற்காகவே நடைபெறுகின்றன.

சிக்கல் மொழிபற்றியது மட்டுமன்று; வகுப்பு வேறுபாடு—ஆளுமை என்ற சூழலுக்கு உள்ளே தான் மொழிச் சிக்கல் எழுகிறது. மொழியின் மீதே முழுக் கவனத்தையும் செலுத்தினுல் உண்மை புலப்படாது. பண்பாட்டின் மீது முழுக் கவனமும் விழுந்துவிட்டாலும் முழுமை தெரியாது. சான்ருேர் பண்பாட்டைக் காப்பதல்ல, இன்றுள்ள முதற்சிக்கல்; மேன்மையான பண்பாட்டை எழுப்ப, நிலைப்படுத்த, அடித்தள மாற்றங்கள் இன்று தேவை.

சாதி சமய மற்ற பொதுமையை—தமிழர் என்ற ஒருமை உணர்வைப் பெறுவதைப் போற்றுகிறார் பெருஞ்சித்திரனார். ஏற்றத் தாழ்வுகள், ஏழைகளின் நிலைமைகள் பற்றியும் (25-3 63) கவலையோடு பாடுகிறார். பணப் பதுக்கலைப் பறிமுதல் செய்ய வேண்டும் (2-73) என்றும் பேசுகிறார். இதுபோதுமா? பதுக்கலைக் கைப்பற்றிவிட்டு முதலாளியத்தையும் நிலவுடைமையும் அப்படியே விட்டு வைக்கவா? இவற்றை ஒழிப்பது பற்றிப் பெருஞ்சித்திரனார் ஏன் பேசுவதில்லை? பொதுமை உணர்வு என்று இன்று பூசிப் பயனில்லை. பொது உடைமை உணர்வு, காலத்தின் தேவை. புரட்சிதான் எல்லை என்பதற்கு இவ்வுணர்வே அடிப்படை. செல்வர்களை எச்சரிப்பது (2-74)இன்று போதாது. தமிழ்க் காப்புக்குச் செல்வர்களை இரப்பது பயன் இல்லை. தமிழக மக்கள் வாழ்க்கை மேன்மை என்பது வல்லாண்மை ஆற்றலை அகற்றுவதன் மூலம்தான் இயலும். இதுவே முதற்கடமை. இதற்குத் துணையாகவே, தமிழ்,மொழி, பண்பாடு, வரலாறு முதலிய துறைகளிலிருந்து திரட்டப்படும் ஆற்றல்கள். தமிழக மக்கள் விடுதலைக்குப் பெருஞ்சித்திரனார் தம்மால் செய்ய இயன்றதாகச் சொல்லும் கருத்துப் புரட்சியும் (1-174) இதற்காகத்தான். [இடையில் ஓர் ஐயம். வங்கதேசத்தில் இந்தியபடைப் வென்றதை எத்துணை எக்காளத்தோடு பாடுகிறார் பாவலர்! (4-170) மொழித்துறைக்கு முதல் கவனம் செலுத்த ஆற்றல் மிகுந்த குழு தேவை என்பதையும் தனித்தமிழ் முயற்சியைத் தொடர்ந்து செய்வதன் இன்றியமையாமையையும் நாம் மறுக்கவே இல்லை. இந்தியால் தமிழ் கெடும் (ஆங்கில ஆளுமையால் தமிழ் கெடுவது போலவே) என்பதும் உண்மைதான். ஆங்கிலத்தில் தம்பாடலை எழுதிப் பார்ப்பதும், திறமை உடையவர் ஆங்கிலத்தில் கற்கலாம் என்று பேசுவதும் இப்படித்தான். ஆனால் இவைபற்றிய பார்வை பகுதிப் பார்வைதான். இதனையே முழுப்பார்வை ஆக்கிவிடக் கூடாது. "மொழி நலமே இன நலம், மொழிநலமே கருத்து நலம், கருத்து இல்லையேல் வினையில்லை விளைவும் இல்லை" (1-52) என்பது மொழியையே மெய்யியலாக உயர்த்துவதாகும். மெய்யியல் வகுப்பில் மொழியின் இடம், ஆற்றல் மிகுந்த ஒரு பகுதி அளவுக்குத்தான்.

பெருஞ்சித்திரனாரின் இறைமை பற்றிய பாடல்கள் தனி வகையானவை. இவற்றில் சமயவாதிகள் கூறும் தெய்வம் பற்றிய கருத்துகள்—உருவ வழிபாடு, சடங்குகள் முதலிய தன்மைகள் அற்று 'தூய' நிலையில் விளங்குகின்றன. இயற்கையாற்றல், உயிரியக்கம், உடலியக்கம், சிந்தனையாக்கம் முதலியவை வியப்புணர்வோடு இவற்றில் வெளிப்படுகின்றன. யாகியாகான் வங்காளத்தில் செய்த கொடுமைகளைக் குறிப்பிடும்போது தெய்வமும் உண்டுகொல்? (2-79) என்று கேட்கிறார். ஊருக்கு உழைப்பவரே என் உண்மைத் தெய்வங்கள்(2-32) என்றும் குறிப்பிடுகிறார். தமிழிடம் இவர் கொள்ளும் பற்றும் இவரது இறைமை உணர்வின் ஒரு பகுதிதான். இவரது இறைமை உணர்வு ஐன்ஸ்டீன் (புடவி)பிரபஞ்சம் பற்றிய ஆய்வின்போது உணர்ந்த

(தொடர்ச்சி 14-ஆம் பக்கம்

திருக்குறள் மெய்ப்பொருள் உரையாசிரியர்,
பேரறிஞர், பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

**அடாத பொய்க்குற்றம் சாட்டித்
தடாவில் சிறை வைத்திருக்கும்**

தமிழக முதல்வர்
செல்வி செயலலிதாவின்
நல்லறிவுப் பார்வைக்கும்,

**அவருடைய கட்டளைக்குக் கண்களை மூடிக்
கொண்டு செயல்படும்**
காவல் துறையினர் பார்வைக்கும்,

**அவர்களின் கண்ணசைவுகளுக் கேற்றபடி
நீதி வழங்கும்,**

உயர் நெறி மன்ற நடுவர்களின்
கூர்மையான சிந்தனைக்கும்,
முன் வைக்கின்ற

தண்டமிழ்ச் சான்றோர்களின்
அறநெறிக் கருத்துகள்:

1. **மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான்!**

*கலைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா, புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு!*
—குமரகுருபரர், 'நீதிநெறி விளக்கம்'-9

2. **மன்னனின் கற்றோன் சிறப்புடையன்!**

*மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.*
—ஔவையார், 'வாக்குண்டாம்': 26.

3. வேந்தர் அறிஞர்க்கு ஒவ்வார்!

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் மின்னும்அணி
பூணும் பிறவுறுப்பு, பொன்னே! அதுபுனையாக்
காணும்கண் ஒப்புமோ காண்!

—சிவப்பிரகாச அடிகள், 'நன்னெறி'-40.

4. சொல்லேர் உழவர் பகை கொள்ளற்க!

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை. —குறள்:872.

5. பெரியார்ப் பிழைப்பார் உய்யார்!

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார் —குறள்:896.

ஆங்கிலப் பள்ளியில் படித்துத்
தமிழைப் படியாத முதலமைச்சரே!
பாவலரேறு பெருஞ்சித்திரனாரை
விடுதலை செய்!

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறைமை உணர்வோடும், சுவைட்சர் கூறிய உயிர்களிடத்து மதிப்போடும், தாகூர் கண்ட பாவலரது சமயத்தோடும் ஒத்துப் பார்க்கத்தக்க, மிக உயர்ந்த மாந்தவியல்தான். இந்த உணர்வு இகழத்தக்கது அல்ல. கொச்சை'நாத்திக'க்காரர்களுக்கு இது புரியாது. தெய்வம் பற்றிய உணர்வின் இறுதியான 'தூயநிலை' இது. தொடரும் உலகப் பட்டறிவின்போது, இது வளமான பொருள் முதலியல் உணர்வாக மாற்றமடையும்;மாற்றம் அடைய வேண்டும்.

தமிழகச் சூழலில் பொது உடைமையர் செய்யத் தவறிய—தவறாகச் செய்துவைத்தவற்றின் மேலேயே தொடர்ந்து கவனம் செலுத்துவதால் பயன் இல்லை. உண்மையான பொதுவுடைமை உணர்வு பெறுவது இன்று அனைவர்க்கும் தேவை. உடைமை ஆற்றல்களுக்கு இரையாகாது இவ்வுணர்வே நம்மைக் காக்கும். தனித்தமிழ் கொள்கையாளரையும்தான். குணாவின் தனித்தமிழ் நமக்கு இனிமை சேர்க்கிறது; அத்துடன் இயங்கியல் வலிமை சேர்க்கும். புதிய உலகம் நோக்கி நடையிட(1-22) இதுவே வழி.

— ஞா நி-யின் 'மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்' நூலிலிருந்து... (தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது).

(இக் கட்டுரை மீதான கருத்துகளை தென்மொழி அன்பர்களிடமிருந்து எதிர்நோக்குகிறோம்).

அடிமைப் பொதியை நீசுமப்பாயோ!

—பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு—

அழுக்குப் பொதியைச் சுமக்கும் கழுதை
அடிமைப் பொதியை நீ சுமப் பாயோ?
இழுக்கே நமக்கது! யானைபோல் நீயும்
இழிபகை தன்னை மிதித்தெழு வாயே!

வழுக்கி விழுந்து வரலா றிழந்தாய்!
வடபுலம் நம்மை அடக்கி யாள்வதோ?
தொழுதே அடிமை செய்துயிர்க்காமல்
தொல்தமிழ் நாட்டை மீட்டு நீ நிமிர்வாய்!

குட்டையை எருமை கொற்றமாய் நினைத்துக்
குளிர்வது போலும் நீகுளிர் வாயோ,
மட்டியே! எழுவாய் மானச் சூளுரைத்து
மண்ணினை மீட்டு நீநிமிர் வாயே!

தட்டிப் பறித்தார் நமதுரி மைகளைத்
தகவில் லாத வடபு லத்தாரே!
கொட்டமடிக்கிற அவர் குறும் படக்கியுன்
கொற்றம் தன்னை நீமீட் பாயே!

வடவர் நம்மை அடக்கியாள்வதோ?

கொடுத்துக்கை சிவந்த தமிழா! நீயுன்
குடுமியை வடவர் கையில்கொடுத்தே
எடுபிடி யாகஇங்கே நீயும்
இரந்தே உண்டு வாழுவதோ!ஓ!

மிடுக்கை இழந்துநீ மேவா(து) உரிமை
வீழ்ந்தே அடிமை செய்திருப் பாயோ!
அடுத்துக் கெடுக்கும் அவர் உறவறுத்தே
அந்தமிழ் நாட்டை நீமீட்பாயே

வடவர் நம்மை அடக்கி யாளவா
வன்சிறை புகுந்து வ.உ.சி,மற்றும்
திடமாய் எழுந்து திருப்பூர்க்குமரனும்
செம்மாந் துயிரை ஈகம் செய்தனர்?

நடநட! நம்மில் நாலரைக் கோடியில்
நாமொரு கோடிப்பேர் செத்தொழிந் தாலும்
சடசட சடவென வருபகை சாய்த்துத்
தமிழ நாட்டை நாம்மீட் போம் வா!

அன்பர்களுக்கு வேண்டுகோள்

பாவலரேறு அவர்கள் 'தடா' சட்டத்தின்கீழ் சிறை வைக்கப்பட்டுள்ளதும் தடா சட்டத்தின் கொடிய தன்மையும் அன்பர்கள் அறிந்தவையே. இதனால் அவர்தம் அளப்பரிய மொழி, இன,நாட்டுப் பணிகள் தடைப்பட்டு நிற்கின்றன.

ஐயா அவர்களைப் பிணையலில் விடவும் மறுத்துள்ளனர். மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அவரை விடுவிக்குமாறு அரசை வற்புறுத்தி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கண்டன அறிக்கைகள் விடப்பட்டன.

அவ்வகையில் கழக அன்பர்களும் ஆர்வலர்களும் கீழே குறிப்பிடப்படுவது போல ஒரு வேண்டுகையை அஞ்சலட்டை வழியும் தொலைவரி வழியும் தமிழக முதலமைச்சருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பொதுமக்களும் இவ்வாறு அனுப்ப அன்பர்கள் ஆவன செய்யலாம்.

அஞ்சலட்டையில்.

தமிழக அரசே!
தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களின்
தமிழ்ப் பணியைத் தடுக்காதே! உடனே
அவரை விடுதலை செய்!

நம் பாவலரேறு ஐயா அவர்கள்
சிறைக்குச் சென்ற விளக்கங்கள்.

1. *1965*— இந்தியெதிர்ப்பில்-அரசை எதிர்த்து ஆசிரியவுரை எழுதியதால் வேலூர் 2மாதம் சிறை.
2. *1972*— தமிழக விடுதலையை வலியுறுத்தி—தமிழக வரலாற்றில் முதன்முதலில் மாநாடு நடத்திச் சிறை—மதுரையில் ஒரு கிழமை.
3. *1974*— தமிழக விடுதலை மூன்றாம் மாநாடு நடத்தியதால் சென்னை நடுவண் சிறையில் ஏறத்தாழ 2 மாதங்கள்.
4. *1976-77*—தமிழக விடுதலைக் கருத்துக் கொண்டிருந்ததால் ஓராண்டுமிசாச் சிறை-சென்னை நடுவண் சிறை.
5. *1981*— மனு(அ)தர்ம நூலுக்குத் தீவைத்துக் கொளுத்தியதால் கோவைச் சிறையில் ஒருமாத அளவில் இருந்தார்.
5. *1990*— தஞ்சையில் தமிழர் தேசியத் தன்னுரிமை அறிவிப்பு மாநாட்டிற்கு சென்றபோது திருச்சி நடுவண் சிறை-ஏறத்தாழ ஒருமாதம் சிறை.
6. *1991*— சென்னைக் கூட்டத்தில் இராசீவ் கொலையைச் சரியெனப் பேசியதால்,தனுவை வீரப்பெண் என புகழ்ந்தால் சென்னை நடுவண் சிறை-15நாள்
7. *1993*— விடுதலைப் புலிகள் வெற்றி உறுதி என்றும், தமிழக விடுதலை தவிர்க்க முடியாதது என்றும் 'தமிழ்நிலம்'. இதழில் எழுதியதால் தடா சிறையிருப்பு:

காளாம்பி

நாடக ஆக்கம்: அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'பாவியக் கொத்'தில் 2—ஆவது பாவியம்)

காட்சி—7

உறுப்பினர்: தந்தை—தாய்—மகன் காதலி, கணவன். பழைய காதலன். மாப்பிள்ளை வீட்டார்.

இடம்: தொடர்வண்டியறை, பின்வீடு.

காட்சிநிலை: பழைய நினைவுகள் இருவருக்கும் காட்சியாய் ஓடுகிறது. இருவரும் சந்தித்துப் பேசிய நினைவுகள்.

கண : (எதிரிருக்கையில் உருண்டு படுக்கிறான்).

மக. கா: (அவனைச் சரியாகப் படுக்க வைத்துவிட்டு அமருகிறாள்)

பழை. கா : (அவளைப் புன்னகையோடு பார்க்கிறான்).

மக. கா : (அவளும் அவனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு கண் கலங்கக் கண்ணீர்த் துளிகள் கீழே விழாதபடிக்குத் தன் முந்தானையால் துடைத்துக் கொள்கிறாள். இருவர் உள்ளங்களும் முன் சந்தித்த உணர்வில், எண்ணங்கள் இயங்குகின்றன.

காட்சி மாற்றம்

பழை. கா : அவள் அணிந்துள்ளத் தாலியைப் பார்த்து பெருமூச்சு விட்டதும், அவனுள்ளம் பழைய எண்ணங்களுக்கு மாறி, அவை காட்சியாக அமைகிறது.

பழை. கா : பறக்கும் பாவையே! 'காதல் தவறினால் சாதல்,' என்று சொன்னதை இனி நம்பமுடியாதல்லவா?

மக.கா : நம் காதல், தூய்மையானதுதான். அதை அழுக்குப் படுத்தியது, இக் குமுகாயம். அதற்காக நாம் சாடவேண்டியது குமுகாயத்தை. நாம் சாவது எனக்குச் சரியாகப் படவில்லை. குமுகாயத்தில் ஒரு மாற்றம் வந்தால்,இந்த ஏமாற்றம், நடவாதல்லவா? காதலர்களின் உள்ள உணர்வுகளை அறியாத மாந்தக் குழுக்கள் சில நம்மைப் பிரித்துவிட்டன. அதனைக் காட்டவே சாட்சியாக இந்தத் தாலி. பெண்களுக்குத் தாலி கட்டும் நோக்கம் பிரிவை உணர்த்தத்தானே!

ப.கா: நாம் பிரிக்கப்பட்டதும் உரலில் அகப்பட்ட பயறு போல நெரிக்கப்பட்டேன். புனலில் சிக்கிய நான் தவிக்கும் உணர்வால் அழுத்தப்பட்டேன். உன்னை எண்ணிக் கண்ணீர் விட்டேன். மீண்டும் உன்னைக் காண எண்ணினேன். உனக்குத் திருமணம் என்றதும் தொண்டை வரளத் துன்பப் பட்டேன். பண்டைய எண்ணங்கள் அண்மைச் சூழலை மறக்கச் செய்துவிட்டன. உன் கையிலிருக்கும் குழந்தையைக் கண்டதும், என் கண்பார்வையை மாற்றினேன். நீ! இன்னொருவனின் மனைவி என்ப-

தால் உனக்குத் துன்பம் தரலாகாது என வேறு பக்கம் திரும்பி னேன் என்றாலும் என்றும் நீ எனக்குக் கரும்புதான்.

மக.கா : ''உங்களுக்கு நான் கரும்பென்றாலும்,என் மனத்தை இரும்பாக்கிக் கொண்டேனே! 'எனக் கவலைப்பட்ட நாட்கள் எத்தனை! எத்தனை! நாம் இருவரும் ஆற்று மணலில் ஆடிய ஆட்டங்களை எண்ணுவேன். உவந்தளித்த முத்தத்தின் தழும்பு-களைத் தடவிப் பார்த்து இன்பத்தை உணர்வேன் கண்ணாளா! காதலின் உணர்வுகளை அறியாதாரின் கட்டுப்பாட்டுக்குள் அழுத்-தப் பட்டேன். அடைபட்ட குருவிக் குஞ்சாக நெஞ்சுழன்று காதல் கசிவால் அன்பு குறையக் கண்டேன். ஆனால் நெஞ்சில் இன்பத் தழும்புகள் மாறவில்லை. என் உள்ளத்தில் ஊறிய எண்ணங்கள் வற்றினாலும் அந்த ஊற்றின் வழிகள் அடைக்கப் படவில்லை.

ப.கா : அப்படியேதான் நானும் எண்ணி ஏங்கினேன். மங்கிய காதலை மறந்தும் பார்த்தேன். இறந்துவிடலாம் என்று எண்ணிய போது நீ சொன்ன சொல்லாகிய 'கோழை!' என்பதை நினைவு படுத்தி உயிர் வாழ்கிறேன். நம் காதலைத் தடுத்த உன் பெற்றோர் கிளியைப் பூட்டிக் காவல் இருந்ததைப் போலக் காத்தனரே! அப்போது நீ எப்படித் துடித்திருப்பாய்?

மக.கா : ஆமாம் துடித்தேன். எப்படியும் வெளியில் போகத் திட்டம் போட்டேன். ஒன்றும் கை கூடவில்லை. அதற்குள் எனக்கு ஒருவன் வந்து சேர்ந்தான். என்ன செய்வது, முடியாத ஒன்றை முடித்தே ஆகவேண்டும் எனத் துடித்த என் பெற்றோரை மீற முடியாமல் தனிநாடு கேட்டவர் ஏமாற்றியதுபோல உங்களை ஏமாற்றிவிட்டேன்.

காட்சி மாற்றம்

இடம் : வீடு

(மாப்பிள்ளை வீட்டார் வருகின்றனர்)

பெற் : வாருங்கள்! வாருங்கள்! வணக்கம். தொடர்வண்டி-யில் வந்தீர்களா? பேருந்து வண்டியிலா?

மா.வீ : இரண்டிலுந்தான். சிலவேளை நடந்தும் வந்து சேர்ந்தோம்.

தந் : (மனைவியைப் பார்த்து) உம். சரி! சரி! சாப்பாடு எல்லாம் அணியந்தானே? உம். ஒன்று செய்! முதலில் கொஞ்சம் குளிர்நீர் ஏதாவது இருந்தால் கொடு, பிறகு சாப்பிடலாம்.

மா.வீ : வேண்டாம், வேண்டாம். ஒரே அடியாய்ச் சாப்பிட-லாம்.

தந் : அதுவும் சரிதான்(மனைவியைப் பார்த்து) அப்படியானால் இலையைப் போடு. விரைவு. ம். என்ன விழிக்கிறை?

தாய் : ஒன்றுமில்லை,சாறு(இரசம்)மட்டும் நம் மகனை வைக்கச் சொன்னேன். கொஞ்சம் பொறுக்கவேண்டும்.

மா.வீ : அதற்கென்ன? உணவிற்கு வேளை இருக்கிறது. மெதுவாகவே நடக்கட்டும்.

தந் : அப்போ ஒன்று செய்(மாப்பிள்ளை வீட்டாரைப்பார்த்து) நீங்கள் தேநீர் குடிப்பீர்களா? அல்லது குளம்பியா?

மா.வீ : இரண்டும் வேண்டாம்.

தந் : ஏங்க?

மா.வீ : அது என்னது.பழக்கமில்லாததைக் குடித்து ஏதாவது செய்தால்?

தந் : (சிரித்து) ஓகோ! தேநீர் என்றால் டீ, குளம்பி என்றால் காப்பி.

மா.வீ : அப்படியா. தேநீர், குளம்பி என்றதும் குழம்பி விட்டோம்:

தந் : வரும்போதே குழம்பாதே. குளம்பி கொண்டுவரச் சொல்லட்டுமா?

மா.வீ : ஒரே அடியாய்ச் சாப்பிட்டுவிட்டால் என்ன ?

தந் : அதுவும் சரிதான்.

(சாப்பாட்டிற்குப் பின்)

தந் : (மாப்பிள்ளை வீட்டாரை நோக்கி)பையன் என்ன வேலை பார்க்கிறார்?

மா.வீ : அரசு வேலை.

தந் : அப்படியானால் சம்பளம் மிகுதியாகக் கிடைக்குமே!

மா.வீ ; அதற்குக் குறைவில்லை. சம்பளத்திற்குக் குறைவே இல்லை. சம்பளத்தைவிட கிம்பளந்தான் கூடுதலாக கிடைக்கும். 5, அல்லது 6 மடங்கு கிம்பளம் மிகுதி.

தந் : அதைத்தான் கேட்டேன். நான் பெண் தருகிறேன். எல்லாருக்கும் உடன்பாடே. திருமணநாள்?

மா.வீ : உடனே. அடுத்தத் திங்கள்-ஆவணியில் கடைசிக்வெள்ளிகிழமை.

தந் : சரி. போய் ஏற்பாடு பண்ணுங்கள். நாங்கள் அணியம். (போய்விட்டார்கள்)

காட்சி மாற்றம்

நிலை : பழைய நினைவுகளோடு நிகழ்ச்சிகளின் காட்சி.

ப.கா : உன்னைச் சந்திப்பேன் என்று கனவிலும் நினைத்ததில்லை.

ம.கா : நீங்கள் இறந்திருப்பீர்கள் என்று எண்ணி இருந்தேன். பிறந்தவர் போலத் தோன்றி விட்டீர்கள்.

ப.கா: இழந்ததைக் கண்டெடுத்த இரப்பான் போல உன்னைக் கண்டுவிட்டேன். நீயோ குழந்தை அழும் குரலை மறந்து, கொண்-

டவன் கண்டால் என்னாகும் என்பதையும்நினையாமல், பொல்லாக் காதலைப் புறந்தள்ளாது, பழைய நினைவில் பற்றுக் கொண்டு முன்னைய நினைவுகளை நினைத்து, அறிவு சுருங்கி, அகம் சுருங்கி என்னை நினைத்து ஏங்கித் தவிக்கிறாய். காதலின் வலிமைக்காணாக் கசடர்கள் இருவரையும் பிரித்தனரே. உடலால் பிரிந்தும் உள்ளத்தால் பிரிய முடியவில்லை.

ம.கா : அதனாலேயே அழுதுகொண்டும், அழுத்திய உள்ளத்தைச் சுமந்து கொண்டே பேச எண்ணினாலும் பேசக் கூடாது என்பதால் தவறியும் ஒரு சொல்லைச் சொல்ல முடியாமல் இருவரும் தவிக்கிறோம். பேச முடியவில்லையே! என்று என் குரல் வளை நடுங்குகிறது. பழைய நினைப்பால், தழுவிப் பழகிய என் விரல்கள் நெளிகின்றன. கழிந்த நாள்களை நினைவுபடுத்தக் கண்ணீர் வடிகிறது, உள்ளம் உங்களிடம், என் உடல் என் கணவனுக்கு. இங்குக் கற்பு என்பதைக் கற்பித்த மூடர்கள் இதை உணர்ந்திருந்தால் இப்படி இருவரையும் தவிக்கவிட்டிருப்பார்களா? காதலை விரித்துப் பாடியப் பாவலர்கள் கூட, கற்பிற்குச் சரியான இலக்கணம் சொல்லவில்லை. மறந்துவிட்டார்கள். கற்பை விரும்பினால் காதலை நொறுக்கலாமா?

ப.கா : இப்படி எத்தனை எத்தனை இளம் காதலர்கள் கருத்திழந்து வாழ்கின்றனரோ? காதலைத் தூளாக்கிவிட்டு உள்ளத்தை வேறாகவும் உடலை வேறாகவும் பிரித்துவிட்டு கற்புக்கதை பேசித் திரிகின்றனர். உள்ளத்தால் ஒருவனையும், உடலால் ஒருவனையும் விரும்பினால் அதற்குப் பெயர் என்னவோ?

மசு.கா : யாருக்குத் தெரியும் கற்பு என்பதைக் கண்டுபிடித்த அறிவாளியே ஆண்கள்தான்- நான் நினைக்கிறேன், உடலால் ஒருவனோடு நினைத்தால் அதைத்தான் கற்பு என்பர் போலும். உள்ளத்தால் வேறொருவனை விரும்பினால் அதைத்தான் காளாம்பி என்று பெருஞ்சித்திரனார் என்ற அறிஞர் கூறுகிறார்.

ப.கா ; உன் நிலை அப்படித்தானே உள்ளது, உடலால் நீ ஒரு கணவனோடு வாழ்கிறாய். உள்ளத்தால் என்னை மறவாமல் இருக்கிறாய். இதை உணராத காதல் கொலைஞர்கள் காதலைச் சிதைத்துவிட்டுக் கற்புக்குப் புகழ்பாடுகிறார்கள்.

காட்சி மாற்றம்

கண : (உறங்கிய பலகையிலிருந்து உருண்டு விழுகிறான். விளிம்பில் அவன் மண்டை அடிபடுகிறது. முன் நாள் காதலனோடு பேசமுடியாமல் இருந்த அவள் தன் கணவனை அழைப்பதுபோல அத்தான் என்று அருமையாக அழைத்து, உள்ளக் கொதிப்பை வெளியில் விட்டு அமர்ந்து) அத்தான் அடிவலிதோ?

கண : இல்லை, சொத்தை அடிதான்.(சிரிக்கிறான்). (தொடர் வண்டி ஒரு நிலையத்தில் நிற்க, பழைய காதலன் இறங்கி விரைவாக நடந்தான்.)

(தொடர்ச்சி 26-ஆம் பக்கம்)

தமிழ்நாட்டில் குமுக(சாதிய) ஒடுக்கு முறை மற்றும் பொருளாதாரச் சுரண்டலின் வடிவங்கள்!

முன்னுரை : தமிழகத்தில் குமுக ஒடுக்குமுறை என்பது, பல்வேறு சாதிக் குழுக்கள் ஒன்றையொன்று அழுத்திக் கொண்டிருப்பதும் ஒவ்வொரு தொழிற் பிரிவினரும் இன்னொரு தொழிற் பிரிவினரை மேலெழும்ப விடாமல் செய்துகொண்டிருப்பதும், அதன் வழியே பொருளாதாரச் சுரண்டலை மேற்கொள்வதும் நடைமுறையில் நாம் காணும் உண்மையாக இருக்கின்றது. சாதிய ஒடுக்குமுறையும் பொருளாதாரச் சுரண்டலும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாகவும், பிரிக்க முடியாததாகவும் இருப்பதை நாம் வெளிப்படையாகக் காணலாம். இக் குமுக ஒடுக்குமுறையும் பொருளியற் சுரண்டலும் தமிழகத்தில் எந்தெந்த வடிவங்களில் வெளிப்படுகின்றன என்பதை நோக்குவோம்.

பெண் அடிமைத்தனம் : ஒரு தனிப்பட்ட குடும்பத்திலிருந்து ஒட்டுமொத்த மக்கள் தொகை வரையில் பாதிப் பேர் பெண்களாக இருந்தும், எல்லா நிலையிலும் இரண்டு பிரிவினருமே இணைந்து இயங்கினாலும், ஆணிற்குப் பெண் கீழானவள் என்ற எண்ணமும், அப் பெண்களிடமிருந்து அதிகமான உடல் உழைப்பைப் பெறுவதும், அவர்களின் விருப்பமின்றி பாலியல் வன்முறை செய்வதும் தொடர்ந்து நடைபெறுகின்றது. ஒரு சில குடும்பங்களில் அல்லது அலுவல்களில் வேண்டுமானால் சில பெண்கள் ஆண்களை மேலாண்மை செய்யலாமேயொழிய, தமிழ்நாட்டில் பொதுவாக எல்லா நிலையிலும் பெண் அடிமைத்தனமே தொடர்ந்து நிலவுகிறது. இயற்கையான உயிர் இயக்கத்தின்படி குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதிலும் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் பணிவிடை செய்வதிலும் பெண்கள் அதிகமான உடல் உழைப்பைத் தர வேண்டியிருக்கின்றது. இன்னும் சிற்றூர்ப் புறங்களில் பெண்களுக்குக் குறைவான கூலியும் ஆண்களுக்கு அதிகமான கூலியும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம். பெண் அடிமைத்தனத்தை வலியுறுத்துகின்ற மதவியற் கருத்துக்கள் எல்லா மதத்திலும் இருப்பதையும், குறிப்பாக பார்ப்பனிய மதமாகிய இந்து மதத்திலும் இசுலாம் மதத்திலும் அதிகமாக இருப்பதையும் நாம் அறிய வேண்டும்.

'பெண் அடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்அடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே'—என்ற

பாவேந்தர் பாரதிதாசனின் கூற்றுப்படி முதலில் பெண் அடிமைத் தனத்தைப் போக்குவதற்கும் அதற்கான கருத்தியல்களை உடைத்து நொறுக்குவதற்கும் நாம் முன் வரவேண்டும். அதிலும் நேரடியாகத் தாக்கமுறுகின்ற பெண்களே இச் சிக்கல்களை நன்கு உணர்ந்திருப்பதால் அவர்களே பெண்கள் அமைப்புக்களை

அமைப்பதற்கும் முற்போக்கான வேறு இயக்கங்களோடு இணைந்து செயலாற்றுவதற்கும் முன்வர வேண்டும்.

தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் : குமுக ஒடுக்கு முறையினை அடுத்த கட்டமாக ஆரும்பது தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களை மற்ற உயர் சாதியினரும் அரசும் குமுக நிலையில் ஒடுக்குவதும் பொருளியல் நிலையில் சுரண்டுவதும் ஆகும். தமிழ்நாட்டின் குமுகாய அமைப்பு எண்ணற்ற சாதிகளையும் சில மதப்பிரிவுகளையும் பல தொழிற் பிரிவுகளையும் கொண்டு இயங்கினாலும், ஒப்பீட்டு அளவில் அதிகமாகக் குமுக ஒடுக்குமுறைக்கும் பொருளாதாரச்சுரண்டலுக்கும் உட்பட்டிருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட தமிழ்மக்கள் தான் என்பதை நாம் உணரவேண்டும். குமுக அமைப்பில் அதிகம் ஈடுபடாத மற்ற மக்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவுப் பொருள்களை விளைவிப்பதிலும், குடியிருப்பதற்குத் தேவையான வீடுகளைக்கட்டுவதிலும், போக்குவரத்திற்குத் தேவையான சாலைகளை அமைப்பதிலும், நகரங்களில் துப்புரவுப் பணிகளைச் செய்வதிலும் தாழ்த்தப்பட்ட பாட்டாளி மக்களின் பங்கு அதிகமாகவே இருக்கின்றது என்பதை முதலில் நாம் உணரவேண்டும். இவ்வளவு கடினமான—இன்றியமையாத பணிகளைச் செய்கின்ற நமக்கு, உயர் சாதியினரும், அவர்களால் அமைக்கப்பட்ட அரசும் கொடுத்தபட்டம் 'தீண்டப்படாதவர்கள்' அரிசன், தாழ்த்தப்பட்டவர்கள்', 'ஆதிதிராவிடர்' நம்முடைய உழைப்பையும் உற்பத்திப் பொருள்களையும் பெற்றுக்கொண்டு, நமக்குச் சரிசமமான குமுக மதிப்பை வழங்க மறுக்கின்ற கொடுமையை இன்னும் எத்தனை தலைமுறைக்கு நாம் ஏற்றுக்கொண்டிருப்பது? நம் உரிமையை மற்ற பாட்டாளி மக்களோடு இணைந்து போராடித்தான் பெறவேண்டும். உரிமை என்பது எடுக்கப்படுவது, கொடுக்கப்படுவது சிறு சலுகை.' இந்தச்சிறு சலுகைகளுக்கே அரசியல் போலிகளிடமும் அரசு அதிகாரிகளிடமும் நாம் இலவு காத்த கிளியாகக் காத்துக் கிடக்கின்றோம். நமக்காகப் பாராட்டுகின்ற நம் குமுகத் தலைவர்களும், உயர்சாதியினரிடமும் அரசிடமும் நம்மை அடகு வைத்து, அவர்கள் மட்டும் சில நலன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

பிற்படுத்தப்பட்ட மக்கள் : குமுகப் படிநிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சிறிது மேல் நிலையில் இருந்தாலும், அவர்களைப் போலவே இம் மக்களில் பெரும்பான்மையினர் மற்ற உயர் சாதியினரின் குமுக ஒடுக்குமுறைக்கும் பொருளியற் சுரண்டலுக்கும் ஆட்படுகின்றனர். இன்று தமிழ்நாட்டில் சிற்றூர்ப் புறங்களில் சாதிய மோதல் பெரும்பாலும் இத் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட தமிழ் மக்களுக்கும் இடையிலேதான் அதிகம் நடைபெறுகின்றது. இந்த இரண்டு பிரிவு மக்களுமே குடியிருப்புக்களில் அருகருகேயும் உடல் உழைப்பில் இணைந்து ஈடுபடுவதும் நடைமுறையில் உள்ளது. தங்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களுக்கு உரிய காரணங்களைக் கண்டுபிடிக்க முடியாமல் ஒவ்வொரு

வரும் பக்கத்து வீட்டுக்காரனோ, அல்லது பக்கத்து நிலத்துக்காரனோ, அல்லது அடுத்த சாதிக்காரனோ தான் முழுமையான எதிரி என்று நினைக்கின்றனர். வேறு உயர் சாதியினரோ அல்லது பிற்படுத்தப்பட்ட மக்களிலேயே பொருளாதாரச் சுரண்டலை அதிகமாகச் செய்கின்ற சிலரோ தான் இச் சாதிக் கலவரத்தை மூட்டி விடுகின்றனர். உண்மை உணர முடியாத இம் மக்களும் ஒருவரோடொருவர் மோதி அழிகின்றனர். ஆட்டையும் ஆட்டையும் மோதவிட்டு நரி இரத்தம் குடித்த கதையாக மேல்சாதியினர் நம்மை ஆட்டிப் படைக்கின்றனர். குமுக நிலையிலும் உழைப்பு நிலையிலும் ஒரே படிநிலையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் முதலில் ஒன்றிணைந்து தங்கள் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே முதல் தேவையாகும்.

உழவர்கள்: தமிழகத்தில் பெரும்பாலான சாதியைச் சேர்ந்தவர்களிலும் அதிகமாகச் செய்கின்ற தொழில் உழவுத் தொழில்தான். உழவுத் தொழிலே மற்ற எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருந்தும் உழவர்களும் உழவுத் தொலிலும் மற்றவர்களால் மதிக்கப்படுவதில்லை.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"—என்று

உழவர்களைப் போற்றிய திருக்குறளுக்கு, புதுக்குரலாக

"உழுதுண்டு வாழ்வாரே சாவர்மற் றெல்லாம்
முழுதுண்டு முன்செல் பவர்"—

என்று சொல்கின்ற அளவிற்கு உழவர்களின் இரங்கத்தக்க நிலை இன்று இருக்கின்றது.

உழவர்கள் தொழில் அடிப்படையில் ஒரு அமைப்பாக-ஆற்றலாகத் தங்களை வெளிப்படுத்த முடியாமைக்கு முதற் காரணம் தொழில் உணர்வைவிட தங்களின் சாதிய உணர்வே அவர்களிடம் மேலோங்கி இருக்கின்றது. இதனாலேயே குமுகநிலையிலும் பொருளியல் நிலையிலும் மேலேயுள்ள சில நிலவுடைமையருக்கும் முதலாளிகளுக்கும் காலங்காலமாக உழைத்துக் கொடுத்துவிட்டு, அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இரையாகி, நாங் வறுமையிலேயே வாடுகின்றோம். உழவுத் தொழில் செய்பவர்களில் பெரும்பாலோர் சாதிமத உணர்விலும், அவை தொடர்பான சாத்திரச் சடங்குகளிலும் மற்ற தொழில்களில் உள்ளவர்களைவிட அதிகம் ஈடுபடுகின்றனர். தங்கள் பொருளாதாரத்தையும் நேரத்தையும் இதிலேயே அதிகம் செலவிடுகின்றனர். உழவுத் தொழில் செய்பவர்களில் பெரும்பாலோர் போதிய கல்வி அறிவு இல்லாத சூழ்நிலையிலேயே உழன்று கொண்டிருப்பதால், ஒன்றிணைந்து தங்களைச் சுரண்டுபவர்களை நோக்கிப் போராட முடிவதில்லை.

இவ்வுலகக் குமுகாயம் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதே உழவுத் தொழிலால்தான் என்பதை உழவர்களே இன்னும் உணரவில்லை. நாமே உணராதபோது நம்மைச் சுரண்டி வாழ்பவர்கள் எப்படி நமக்கு உதவி செய்வர். மற்ற தொழில்களுக்கு எல்லாம் அடிப்படையும் மற்ற தொழில் செய்வோராகிய சிறு வணிகர்கள், முதலாளிகள், அரசு அதிகாரிகள், மதவியலார் ஆகிய அனைவரும் அதிகமாகச் சுரண்டுவது உழவர்களைத்தான். அடித்தளத்தை அசைத்தால் மேல்தளத்தை வீழ்த்தலாம் என்பதைத் தமிழக உழவர்கள் உணர்வது எப்போது?

தொழிலாளர்கள் : உழவர்களைப் போலவே பல்வேறு சாதிகளிலிருந்து வந்த பலர் புதிய புதிய தொழில்களில் வேலை செய்கின்றனர். இவர்களில் உதிரிப் பாட்டாளியாக சிற்றூர் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் மற்றவர்களின் குமுக ஒடுக்கு முறையிலும் குறைந்த கூலியிலும் வேலை செய்கின்றனர். இத் தொழிலாளர்கள் தங்களை ஒருங்கிணைத்துக்கொண்டு தங்கள் உரிமைகளைப் பெறமுடியாத சூழ்நிலையிலேயே இன்னும் இருக்கின்றனர்.

மற்ற சில பிரிவினர் அரசு அலுவல்களிலும், பெரிய தொழில் நிறுவனங்களிலும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட அதிகம் வருவாய் உள்ள நிலையில் இருக்கின்றனர். இந்தப் பிரிவு தொழிலாளர்களும் அலுவலர்களும், தங்கள் வகுப்புப் பின்னணியையும் தாங்கள் சார்ந்த மக்களைப் பற்றியும் சிந்திக்காமல், இன்றைய முதலாளித்துவ அரசின் ஒட்டுண்ணியாகவும் மற்ற பாட்டாளி மக்களை ஒடுக்கிச் சுரண்டுவதிலும் முன்னணியில் இருக்கின்றனர்.

முடிவுரை : தமிழ்நாட்டில் குமுக ஒடுக்குமுறையும் பொருளாதாரச் சுரண்டலும், தனிப்பட்ட குடும்பத்திலிருந்து அரசு அமைப்புவரை காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. இந்த குமுகஒடுக்குமுறையையும் சுரண்டலையும் ஒழிப்பதற்கு, அங்கங்குள்ள குமுகச் சூழலுக்கும் தொழில் நிலைக்கும் ஏற்ற ஒருங்கிணைந்த அமைப்புகளை உருவாக்க வேண்டும். அங்கங்கு ஏற்படுகின்ற சிக்கல்களுக்கெல்லாம் முதற்காரணமாக நேரடியாக நம் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கின்ற இன்றைய இந்திய—பார்ப்பனிய—தரகு முதலாளிய அரசை நோக்கிப் போராடுவதற்கு, பாட்டாளி மக்களின் அரசியல் உணர்வை உயர்த்துவதற்கும், அவர்களை ஒருங்கிணைப்பதற்கும் நாம் இடைவிடாது பாடுபடவேண்டும். O

அன்பர்கள் கவனிக்க!

ஐயா அவர்களின் வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்று கழகத்தினரும் அன்பர்களும் ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—அமைச்சர்]

சிறைப்பட்டது அறம்! தமிழ்!!

— பாவலர் இளஞ்சித்திரன் —

சிறைப்பட்ட தறமிங்கே !
அடடா, ஓ! ஆளும்
செருக்குடையார்க் கினிமேல்தான்
போதாத காலம் !
முறைப்பட்ட தமிழினத்தை
முன்னெடுத்துச் செல்ல
முனைந்ததமிழ் அறிஞரவர்
பெருஞ்சித்திர ஞர்தாம்
குறைப்பட்டுக் கொள்ளுமாறு
செய்தகுற்றம் என்ன
கூண்டிலடை படுவதற்கே?
கூறுகெட்டிங் காள்வோர்
அறைப்பட்டுப் போக! அறம்
கூற்றுருகும் ! இயற்கை
ஆர்த்தெழுந்து சீறுமவர்க்(கு)
அழிவுதரு மாறே !

தளைப்பட்ட தினியதமிழ் !!
அடடா, ஓ ! ஆட்சித்
தலைக்கனத்தார்க் கினிமேல்தான்
போதாத காலம் !
களைப்புற்று விழுந்ததமிழ்
இனம் ஓங்க இங்கே
கனன்றெழுந்த தமிழறிஞர்
பாவலரேறு ஐயா
சுளைப்பற்றுய்ப் பொதுச்சொத்தைச்
சுருட்டினரா என்ன
துவண்டுசிறைக் கொட்டடியில்
கிடப்பதற்கே ? கொள்கை
இளைப்புற்ற ஆட்சியினர்க்(கு)
இல்லை இனி வாழ்வே
எனஇயற்கை சீறுமவர்
விழுந்தழியு மாறே!

அடைப்பட்ட துரிமை இங்கே!
அடடா, ஓ ! பொல்லா
அரசினருக் கினிமேல்தான்
போதாத காலம் !
தடைப்பட்ட தமிழினத்தை
மீட்டெடுக்கும் நோக்கில்
தமிழுணர்வை வளர்த்தெடுக்கும்
தமிழ்ப்பெரியார் ஐயா

கடைப்பட்ட செயலென்ன
செய்தாரிந் நிலத்தில்
கடுஞ்சிறையில் வாடுதற்கே?
கருத்துக்கண் அவிந்த
நடைப்பட்ட அரசியலார்
நாவடங்க, செயல்கள்
நைந்தடங்கி வீழஇனி
இயறுகைக்கூற் றெழுமே!

(20-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழை.கா : (அவன் எண்ணுகிறான்)மடிந்த காதலை மீண்டும் நினைத்து வருந்துகிறோம் இருவரும். கண்ணீர் கரைந்து சொட்டுச் சொட்டாக வீழ்ந்தது. அவளோ முன்பு காதலை ஏமாற்றினாள். இப்போது கற்புக்குப் புதுப் பொருள் காண வைத்துவிட்டாள். உள்ளம் என்னிடம்,உடல் இன்னொருவனிடம். இதனைப் புரியாத காதல் கொலைஞர் உடல் உறவாடலை மட்டும் வைத்து அதற்குக் கற்பு என்று கத்திப் பித்தம் கொண்டலைகின்றனர். என்ன நெறியோ? என்னைத் தென்றலில் அணைத்த அவளின் கைகள் அவனை அணைத்தன. என்னை அணைத்த அவளின் நினைவு அவனுக்குத் தெரியாது. கற்பு நெறிக்கு இன்னொரு விளத்தம் தேவை. (பிரிந்துப் பார்த்துக் கொண்டு மறைந்துவிட்டான். தொடர் வண்டியும் மறைந்தது). திரை

நாடகம் முடிந்தது.

பழங்கால எகிப்தியருடன் தமிழர் தொடர்பு!

தென்னிந்திய தமிழர்களுக்கும் பழங்கால எகிப்திய மன்னர்களுக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததாக அண்மையில் எகிப்தியப் புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது:

''எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதை பொருள்கள் தமிழ் நாட்டில் கிடைத்தவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன; இவற்றிலிருந்து தமிழர்களுக்குப் பழங்கால எகிப்தியருடன் தொடர்பிருந்ததென்பது ஐயமறத் தெரிகிறது''?

இந்தியாவின் பழங்குடிகள் யார் என்று சொல்ல முடியாதென்று அவர் தெரிவித்தார். மலைவாழ் மாந்தர் முது பழங்குடிகள் என்று நினைத்துவிட முடியாது. சிந்துக்கரைப் பகுதிகளிலிருந்தவர் புதியவர் என்பது பற்றி ஐயமில்லை; தென்மேட்டு நிலத்தில் மக்கள் நிறைந்திருந்த காலத்தில் சிறிது காலம் கங்கை ஆற்றங்கரைப் பகுதிகள் மாந்தர் வாழத் தகுதியற்றனவாக இருந்தனவென்பது பற்றியும் ஐயமில்லை.

பிரிவினைத் தடைச் சட்டம்.

எங்குப் பிரிவினை பற்றிப் பேசப் பெறுகின்றதோ, அங்குப் பிரிவினைக்குத் தக்க பொருட்டுகள் இருக்கும் என்பதையும், எங்குப் பிரிவினைக்குத் தடையிருக்கின்றதோ அங்கு விடுதலை வேட்கை மிகும் என்பதையும், வெள்ளையர் ஆட்சியிலும் அதை எதிர்த்துத் தன்னாட்சி நிறுவிய பேராயக் (Congress) கட்சி வரலாற்றிலும் இன்னும் பிற உலக நிகழ்ச்சிகளிலும் நாம் தெளிவாகக் கண்டோம்.

எங்கும் பிரிந்து போக விரும்புவார் சிறுபான்மையராக விருப்பதையும், பிரிந்து போகத் தடையிடுவார் பெரும்பான்மையராக விருப்பதையும் நாம் அறிவோம். இப் பெரும்பான்மையரிடமிருந்து சிறுபான்மையினர் பிரிந்துபோக விரும்புவது ஏன்? இதற்கு வெறும் உணர்ச்சியும், மேலோட்டமான எண்ணமும்; சட்ட திட்டங்களின் வலிந்த கட்டுக் காவல்களால் தகர்த்தெறியத்தக்க காரணங்களுமே அடிப்படையாக விருக்க முடியாது. பெருத்த அரசியல் வரலாற்று, மொழி, பண்பாட்டு அடிப்படையிலேயே ஒரு சாரார்க்கு விடுதலை வேட்கை பிறக்கும். அவை பொருட்டே ஒரு கூட்டம் அவ்விடுதலை வேட்கையைத் தடுக்க முயற்சி செய்யும்.

உலகியல் முறைப்படி ஒருவர் பிரிவு கேட்பதோ, இன்னொருவர் அதைத் தடுத்து ஒற்றுமையை வலியுறுத்துவதோ குற்றமாகா. ஆனால் விடுதலை வேட்கையினர் தாறுமாறான வழிகளில் அதனை வற்புறுத்துவதோ, ஒற்றுமை விரும்புவார் ஆணை, அடக்கு முறைகளால் அதனைத் தடுக்க முயல்வதோ தான், தமக்கும் நாட்டுக்கும் சொல்லொணாக் கேடுகளைப் பயக்கும்.

அண்மையில் இந்திய அரசியலார் கொண்டு வரவிருக்கும் பிரிவினைத் தடைச் சட்டம், எதிர்காலத்தில் என்றேனும் ஒரு நாள் இந்தியா பற்பல வகையில் பிளவுண்டுபோகும் என்பதற்கே அடிப்படையாகுமன்றி, அதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சிக்குக் கட்டாயம் வழி வகுக்காது.

குடியரசு அமைப்பு முறையின் முழுமுதல் அடிப்படைச் சிறப்பு என்னவென்றால், எல்லாக் குடிமக்களின்—அன்றிக் குடிமக்களில் ஒருசிலரின் அவ்வப்பொழுதைய உரிமைக் குரலுக்குச் செவி சாய்ப்பதே ஆகும். அவ்வுரிமைக் குரல் எழுப்பப்படுகையில் அதற்குச் சரியான வகையில் அமைவு கூறி அதனைத் தணிக்க முயல்வதே குடியரசு முறையைக் கட்டிக்காக்க விரும்புவார் செய்யவேண்டிய செயலாம். அஃதன்றிக் குடிமக்கள் சிலரால் எழுப்பப்பெறும் உரிமை வேட்கையின் குரல்வளையை அழுத்தி நெறித்து அக்குரலெழாமல் தடுக்கும் குடியரசைவிட, தன் விருப்பம்போல் மக்களை அலைக்கழித்து அச்சுறுத்தித் தன் வலிந்த கைகளால் மெலிந்த குரலெழுப்பும் மக்களைத் தடுத்து வன்மம் புரியும் முடியரசே நூறு மடங்கு மேலாம்.

இந்தியப் பேராயக் கட்சியின் ஆளுநர், அண்டை நாட்டாரொடு எல்லைப் போரிட்டுக் கொண்டிருக்கும் இதே பொழுதில், எவ்வகையிலும் தமக்குத் தொல்லைதராத—மாறாகத், துணை புரிகின்ற ஒரு சார் மக்கள், தாம் பின்னர் எழுப்பப் போவதாகக் கூறும் விடுதலைக் குரலுக்கு அணையிட முயன்று, அவர் தம் வெறுப்புக்கும் பகைக்கும் ஆளாகின், அந்நிலை எத்துணைப் பெருந் தீங்கை விளைவிக்கும் என்று நாம் கூறற்கியலாது.

இப்பொது நிலைகளை ஒருவாறு விடுத்துப் பிரிவினைக்குரிய சிறப்பு நிலைகளை ஒரு சிறிது பார்ப்போம்.

இந்திய அரசினர் இப் பிரிவினைத் தடைச் சட்டத்தை விரைந்து கொண்டுவரும் இந்நிலைக்குத் தமிழ்நாட்டில் அன்று தொட்டிருந்துவரும் விடுதலையுணர்வே தலையாய காரணமாக விருக்க முடியும். அண்மையில் நடந்த தேர்தலில் பெருமளவில் மக்கள் துணையைப் பெற்று மாநில அரசவையிலும் நடுவண் அரசவையிலும் ஒரு நல்லிடத்தைக் கைக்கொண்ட தென்னக விடுதலைக் கட்சி ஒன்றின் நிலை வலுத்த பின்பு, இத்தடைச் சட்டம் கொண்டுவரப் படுவதே இதனை வலியுறுத்திக் காட்டும்.

தமிழ்நாட்டு மக்கள் ஒரு சிலர்க்கு உடன்பாடற்றவையாக இத் தென்னக விடுதலைக் கட்சிக் கொள்கைகள் இருந்தாலும், அக் கட்சிக்கு அடிப்படையான தமிழக விடுதலையுணர்வையும், வரலாற்று உண்மையையும், எவரும் மதியாது புறக்கணித்துவிடல் முடியாது. ஓரளவிற்கு அந்தக் கட்சியின் உணர்வு, தமிழர் தம் உள்ளத்துக் கனல்விட்டுக்கொண்டிருக்கும் உரிமை உணர்வே என்று கூறுவ்தானாலும் அது மிகையாகாது.

இவ் விடுதலை உணர்வு இன்று நேற்று ஏற்பட்டதா? அன்றி வெள்ளையரை எதிர்த்துப் பொருதிக் காலக் கோளாறுகளால் தன்னாட்சியை மறைமுகமாக நிறுவிக் கொண்ட பேராயக் கட்சியின் விடுதலை உணர்விற்குப் பின்னர்த் தோன்றியதா? பருக்கைச் சோற்றுக்குக் கையேந்தி, படுக்கும் பாய்க்கு உடல் சொரிந்து, பிறன் வீசி எறியும் ஒரு சில காசுகளைக் குனிந்து பொறுக்கிக் கும்பி நிறைக்கும் தன்மானமிழந்த தம்பிரான்மார்கள் ஒரு சிலரன்றி, உண்மைத் தமிழன் என்றுசொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவனுடைய உள்ளுணர்விலும் எழுந்ததாகும். இத் தமிழக விடுதலை வேட்கை! இதை எவராலும் அழித்துவிடல் முடியாது. தமிழ்மொழி உள்ளளவும் தமிழன் இருப்பான், தமிழன் இருக்கும் வரை, தமிழ் நாட்டுணர்வும் இருந்தே தீரும் என்பதை எவரும் மறந்து விடல் வேண்டாம்.

மொழி, இலக்கிய, பண்பாட்டு, சமய அடிப்படையில், தனக்கு ஓரகம் நடைபெறுங் காலத்து, ஒவ்வொரு தமிழனும் எழுந்து தன் விடுதலை யுணர்வை வெளிப்படுத்தியே தீர்வான்; வெறும் சட்ட திட்டங்களாலும், அடக்கு முறைகளாலும் இதனை அடக்கி விடல் முடியாது. போலி ஒற்றுமை மணிலாக் கொட்-

ஏ! தாழ்ந்த தமிழகமே!

—மு. உலகமுதல்வன், புதுவைப் பல்கலைக் கழகம்.

இந்தியா விடுதலை பெற்று நாற்பத்துமூன்று ஆண்டுகள் கடந்ததாய்ச் சொல்லப்பட்டாலும், பன்றியினும் கீழான நிலையில் குந்தக் குடிசையின்றித் தமிழர்கள் வாழ்ந்து வருகின்ற அவலநிலை இந்தியப் பெருநிலப்பரப்பில் தமிழகத்தைத் தவிர வேறெங்கும் காணவியலாது! பாலை நிலத்தில் இருந்து தமிழகம் குடிபெயர்ந்த பார்ப்பன பனியாக் கும்பல்கள், தெலுங்கர்கள், மலையாளிகள் வேறு பிற இனத்தவர்கள் எல்லாரும் தமிழ் மண்ணில் தன்னிறைவோடு வாழ்கின்றனர். ஆனால் மண்ணின் தமக்கள்ம் சொந்த மண்ணிலேயே ஏதிலியாக்கப்பட்டு வருகிற கொடிய நிலை கண்டு தமிழார்ந்த தமிழர்கள் மனம் நொந்து வருகின்றனர். வந்தேறிகளை வாழ வைப்பதில் இத் தாழ்ந்த தமிழனுக்கு எவ்வளவு அக்கறைத் தெரியுமா?

சேட்டுக்களுக்கு வட்டி கொடுப்பதிலும், பரிசுச் சீட்டுகள் வாங்குவதிலும் தமிழகம் இன்று முன்னணியில் இருப்பதாக அறிஞர் பெருமக்கள் புள்ளி விளத்தம் தருகின்றனர். மேடைப் பேச்சு அரசியலிலும், மாநாடுகள் போடுவதிலும் தமிழர்களே முன் அணியில் நிற்கின்றனர். சாதிப்பிரிவில் இருந்து தன்மான அரசியல் சீர்த்திருத்தக் கட்சிகள் உள்ளிட்டு, பல்வேறு அரசு அலு-

(முன் பக்கத் தொடர்ச்சி)

டையின் புறத்தோலைப் போன்றது. வேட்கையுள்ளத்தால் அக்காய் உடைத்தெறியப் படும்பொழுது மணிகள் விடுதலை பெற்றே தீரும்.

முற்றி முதிர்ந்து வளர்ந்து பரந்து சிறந்த ஓரினத்தின் ஆணி வேரை ஒருவராலும் அவ்வளவு எளிதில் அறுத்தெறிந்து விடல் முடியாது. தமிழ் மொழி விடுதலை, தமிழ் இலக்கியப் பண்பாட்டு விடுதலை, தமிழர் சமய விடுதலை என்பவற்றிற்குத் தீங்கு நேருங்கால் நாட்டு விடுதலை முழக்கம் எம்மருங்கும் ஒலித்தே தீரும். அக்கால் விடுதலை முழக்கமிடும் இத்தென்னகக் கட்சியொடு ஒவ்வொரு தமிழனும் ஒன்றித் தன்னை முழுமைப்படுத்திக் கொள்ள நேரினும் நேரும் என்று அரசியலார்க்கு எச்சரித்துக் கூறுகின்றோம். சாவைவிட அடக்கி யொடுக்கப் படுந்தன்மை இனிப்பதன்று. இந்திய நாட்டின் ஒற்றுமை உணர்வை விடப் பன்னூறாயிர மடங்கு உயர்ந்து வலிந்ததாகும் தமிழக விடுதலையுணர்வு. அதைச் சட்டத்தால் அடக்குதல் சிறும் புயலை மீன் வலை கொண்டு மறிக்கும் மடமைச் செயல் போன்றது. குடியரசுக் கொள்கைக்கே மாறான இச்சட்டம் நன்மை பயப்பதன்று. மேலும் மேலும் விடுதலை உள்ளத்தைக் கிண்டிக் கிளறுவதாகும். 'துஞ்சு புலி இடறிய சிதடன்' போல ஆளுநர் ஆகிவிடக் கூடாது என்பதே நாம் விரும்புவதாகும். —பெருஞ்சித்திரனார்.

தென்மொழி—ஆசிரியவுரை; சுவடி: 1 ஓலை: 2; 1963.

வலர்கள் அமைப்புகள் வரை ஆண்டுதோறும் மாவட்ட மாநாடு-கள், மாநில மாநாடுகள், பாட்டரங்கம், ஆய்வரங்கம், சொற்போர் மன்றம், இசை அரங்கம் போன்றவற்றை நடத்துகின்றனர். நடுவண் அரசும், மாநில அரசுகளும் கருத்தரங்கங்கள் ஆய்வரங்-கங்கள் நடத்தியவண்ணமுள்ளன. பாலியல் உணர்வைத் தூண்டும் திரைப்படச் சிறுக்கிகளுக்கு 'விருது' வழங்கும் விழா முதற்கொண்டு, தமிழீழத்தில் தமிழச்சியைக் கற்பழித்து 'வீரச் செயல் புரிந்த' கயவர்களுக்கு வீர 'விருது' வழங்கும் விழா வரை அரசுகளே நடத்துகின்றன!

தமிழகமெங்கும் சாதி மாநாடுகள்தாம்! ஆளுயர வண்ணச் சுவரொட்டிகள்! அலங்கார வளைவுகள்! அந்தந்தச் சாதிக் கேற்றாற்போல் மாநாட்டுப் பந்தல்கள்! விண்ணைமுட்டும் சாதி-யின் எழுச்சியுரைகள்! சாதியைப் பற்றி வீண் கொக்கரிப்புகள்! அரசை வலியுறுத்தும் தீர்மானங்கள்! இன்னும் எத்தனை எத்தனையோ...பல இலக்கக்கணக்கான உருபாய்களைக் கொட்டிப் பாழடிப்புகள்!

மதத் தலைவர்களால் நடத்தப் பெறும் சமய மாநாடுகள் உலக அமைதியை நிலை நாட்ட அறவேள்விகள்; யானை, குதிரைப் படைசூழ ஊர்வலங்கள்; அரசியல் தலைவர்கள் பங்கேற்புகள்; வாணவேடிக்கை மற்றும் க(ளி)லையாட்டங்கள்; இங்கும் பல இலக்கக் கணக்கான உருபாய்களைக் கொட்டிப் பாழடிப்புகள்! மதவெறியுணர்வைத் தூண்டி, தமிழர்களை அலைக்கழித்துச் சாகடிக்கின்றனர்—அச் சமய வெறியர்கள்.

இனி அரசியல் கட்சிகளின் விழாக்கள், மாவட்டமாநில மாநாடு கள்! தடித்த கொட்டை எழுத்துக்களில் ஆளுயர விளம்பரச் சுவரொட்டிகள்! முச்சந்திக்கு முச்சந்தி அரசியல் எத்தர்களின் மிக உயரமான மின்விளக்குகளால் 'புனைவுசெய்யப்பட்ட' அட்டை உருவங்கள்! பார்ப்பவர்கள் கண்ணைப்பறிக்கும் வளைவுகள், தலைவர்களை வரவேற்கும் கையால் எழுதப்பட்ட வண்ணப் பதாகைகள், தொடர்ந்து தலைவர்களின் புகழ் பாடிக் கொண்டி-ருக்கும் ஒலிபெருக்கியின் அலறல்கள்; வண்ண மின்விளக்குகளால் ஒப்பனைச் செய்யப்பட்ட மாநாட்டுப் பந்தல்கள். தலைவர் போகிற வழியெல்லாம் வெட்டுருவங்கள். ஒவ்வொரு வெட்டுருவமும் பல ஆயிரக்கணக்கில் செலவழிக்கப்பட்டுத் தலைவரின் புகழ்(!) பரப்புகின்றது.

தலைவர் மாநாட்டுப் பந்தலையோ, நிகழ்வு இடத்தையோ நெருங்கியதும் அதிர்வேட்டுகள்! மகிழுந்தின் கதவைத் திறந்துவிட நூறு பேர்கள்! மேடையில் அமரும் வரை புகழாரம் சூட்டி, கைதட்டல் செய்து களிக்கச் செய்யத் தொண்டர் படைகள்; தலைவரின் கடைக் கண் பார்வைக்கும், கட்டளைக்கும் ஏங்கிக் காத்திருக்கும் ஒன்றிய, வட்ட, மாவட்ட குறுநில மன்னர்கள்!

செலவினங்களோ ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் கோடியைத் தாண்டும்! ஆனால் தமிழர் நலனுக்கோ ஒரு விழுக்காடுகூடப் பயனில்லை என்பதுதான் உண்மை!

இனி மாவட்டத் தலைநகரொன்றில் தமிழினத் தலைவர்களில் ஒருவர்; 'திராவிடத் தளபதி'; அண்ணாவின் அன்புத் தம்பி; புரட்சித் தலைவியின் நம்பிக்கை விண்மீன் (நட்சத்திரம்) (நல்ல அடிமை என்று பொருள்) தமிழ்த்தாயின் தவப்புதல்வர் ஒருவரின் பிறந்தநாள்! (தமிழர் தன்னுரிமை பெற்ற நாளன்று!) நகரெங்கும் ஆளுயர வண்ணச் சுவரொட்டிகள்! ஒன்றியம், வட்டம், மாவட்டம், நகரக்கிளைகளின் சார்பில் பல்லாயிரக்கணக்கான உருபாய்களைக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் விளம்பரங்கள்! அவர் தலைமையில் அவர் புகழ் பாட பாவரங்கம், ஆய்வரங்கம்! சாதித் தலைவர்கள் புடைசூழ பொன்னாடைப் போர்த்தி மலர்மாலை அணிவிப்புகள்! தன்னலமற்ற அரசு உயரலுவலர்களும் ஊழியர்களும் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தல்!

இதுவரையில் தமிழ்நாட்டில் ஏறத்தாழப் பல ஆயிரம் கோடி உருபாய்கள் மேடைப் பேச்சுக்கும், மாநாடுகளுக்கும், தனிமாந்த வழிப்பாட்டிற்கும், புகழ்மாலைக்கும் கொட்டிப் பாழடிக்கப்பட்டுள்ளன! இப்பணத்தைக்கொண்டு, உலகின் ஒரு பகுதியிலாவது தன்மானமுள்ள ஒரு தமிழ்நாட்டை உருவாக்கி இருக்கலாம்! தமிழ்நாட்டில் உள்ள குடிசைகளை மாற்றி இருந்தால்கூட, மாடி வீடுகள் ஆகி இருக்கும்! நீர்ப்பாசன அணைக்கட்டுகளைக் கட்டி இருக்கலாம்! வறுமையை ஒழித்து இருக்கலாம்! செய்தோமா? செய்வோமா? நம்மை நாமே சுரண்ட வழி விட்டுவிட்டு ஏனய்யா ஏமாந்திருக்கவேண்டும்?

உருசிய நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட மாவீரன் இசுடாலினின் வரலாற்றைப் பற்றி இன்று அடிச்சுவடே இல்லை. அமெரிக்கத் தன்னுரிமைப் போராட்டத்தில் பெரும் பங்கெடுத்த சார்சு வாசிங்டனைப் பற்றி ஏட்டோடு சரி! சீனாவின் பொதுவுடைமைத் தந்தை மாவோவைப்பற்றிப் பேச்சே எழவில்லை! இசுரேலிய வல்லாண்மையை எதிர்த்துப் போராடித் தனி நாடு அமைக்கும் யாசிர் அராபத்து தன்விளம்பரம் தேட முற்படவில்லை! தென்னாப்பிரிக்க விடுதலைக்காக, வெள்ளையனின் வெஞ்சிறையில் இளமைக் காலத்தைக் கழித்த கறுஞ்சிறுத்தையான நெல்சன் மண்டேலா அவர்கள் தெரு விளம்பரத்தையும், ஆளுயர முளரி மாலைகளையும் விரும்பியதாக வரலாறே இல்லை!

தமிழன் முதுகெலும்பு உடையவன்; தமிழன் கோழை அல்லன்; தமிழன் தன்மானமுடையவன் என்பதை உலகறியச் செய்து, புதிய புறநானூற்றைப் படைக்கும் மாவீரன் பிரபாகரன் கூட விளம்பரத்தை விரும்பியதே இல்லை! ஆனால் இத் தாழ்ந்த தமிழன் மட்டும் இதற்கு நெறிவிலக்கு!

அய்யா, தமிழ்நாட்டில் உள்ள தமிழினத் தலைவர்களும், 'தளபதி'களும் தடுக்கி விழுவதற்குக்கூட விளம்பரத்தை விரும்புகிறார்கள். யாரை ஏமாற்ற இவ்வாறு செய்கிறார்கள் என்று சற்று எண்ணிப்பார்த்தால் அவர்கள் தன்விளம்பரத்தையும், தனி மாந்த வழிபாட்டையும் ஏன் விரும்புகிறார்களென்றால் சிங்களப்'பேரின'வாதத்தைஎதிர்க்கஅல்ல! வடநாட்டு வல்லாண்மையை எதிர்க்க அல்ல! கன்னட, மராத்திய இனவெறியை எதிர்க்க அல்ல! தமிழ்நாட்டின் பண்டை நலத்தை நிலைநிறுத்துவதற்கு அல்ல; தமிழ்நாட்டில் பொதுமைப் பூங்காவை உருவாக்குவதற்கு அல்ல; பின் எதற்காக? ஒட்டியவயிறு; பறட்டைத் தலை; குழிவிழுந்த கண்கள்; உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, குந்தக் குடிசையின்றி, நாயாய், பேயாய் அலைகின்றானே தமிழன் அவனை ஏமாற்றுவதற்கு. இன்னுமா புரியவில்லை உங்களுக்கு? ஏழை எளிய மக்கள் கொடுக்கின்ற வரிப்பணம் விளம்பரமாகப் போகிறது! அறிவிக்கின்ற நல்வாழ்வுத் திட்டங்கள் நூறு இலக்கமென்றால் அதில் விளம்பரம் இருபத்தைந்து இலக்கமாகும்!

ஒட்டிய வயிறுகள் ஒட்டப்பட்டே இருந்துவிடாது. கூன் முதுகுகள் கூனிக்கொண்டே இருந்துவிடக்கூடாது.

பசியால் பஞ்சடைந்துபோன கண்கள் ஒருநாள் விழிக்கத்தான் போகின்றன.

உழைத்து ஓடாய்ப்போன தமிழ்ப் பேரினம் தன்நிலையை உணரத்தான் போகின்றது.

அன்றைய அதன் எழுச்சியே—

இந்த வெட்டுருவ நாயக, நாயகியர்களின் வேரறுக்கும் என்பது உறுதி. O

தமிழம் செ. பன்னீர்ச்செல்வம் அவர்களின் இளைய மகன் மறைவு!

எழுபதுகளில் வெளிவந்து கொண்டிருந்த 'தமிழம்' எனும் தனித் தமிழ் இதழின் ஆசிரியரும், தென்மொழி தொடங்கிய காலத்தில் தென்மொழியின் துணையாசிரியராகவும் தோன்றாத் துணையாகவும் இருந்த உயர்திரு. செ. பன்னீர்ச்செல்வம், உலகமுதல்வி ஆகியோரின் இளைய மகன் திரு. இளம்வழுதி கடந்த 27-1-93—அன்று இயற்கை எய்தினார்.

77-ல் பாவலரேறு ஐயா அவர்கள் 'மிசா'வின் கீழ்ச் சிறைப் பட்டிருக்கையில், உயர்திரு. பன்னீர்ச்செல்வம் அவர்களின் மூத்த மகன் அறிவழகன் இயற்கையெய்தினார்.

சிறையில் இருக்கும் பாவலரேறு ஐயா அவர்களுக்கு இச் செய்தி தெரிவிக்கப்பெற்றது.

எதிர்பாரா வகையில் ஏற்பட்ட பேரிழப்பைத் தாங்க இயலாமல் இருக்கும் பன்னீர்ச்செல்வம் அவர்களின் குடும்பத்திற்குத் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

—அமைச்சர்.

O : 1532 அன்புடைய ஐயா அவர்களுக்கு வணக்கம்! நானும் தோழர்களும் மக்கள் நடுவில் சில துண்டறிக்கையைப் பரபபிய பொழுது வெறிக் கும்பல் ஆர்.எசு.எசு., பா.ச.கட்சி இந்துமுன்னணியை சார்ந்த தமிழர்களில் சிலர் காவல்துறைக்குக் காட்டி கொடுத்து சிறைப்படுத்தம், உறுப்புச்சிதைவு(சித்திரவதை) 153-A-பிரிவின்கீழ் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இச் செய்தியை அறிந்த தமிழன்பர்கள் முழு ஆதரவு தந்து பிணையலில் விடுதலை செய்ய ஆவன செய்தனர். தாங்களும் விடுதலை ஆகி இருக்கலாம் என நினைக்கிறேன்.

வெளி மாநிலத்தில் தமிழன் ஏதிலியாகின்ற அவல நிலை, சிறையில் தமிழர்களையும் முசுலீம்களையும் வெறித்தனமாகக் காவல் துறையினர் தாக்குகின்றனர். கண்ணால் பார்க்க முடிந்தது. பல ஏதுமறியா மக்கள் மீது கொ , கொள்ளை, கலவரம் தூண்டுதல் போன்ற வழக்குப் போடப்பட்டு அவர்கள் வெளியில் வராதபடி அரசு கொடுமை செய்கிறது.

தமிழர்களுக்கு இன்று ''தடா'' என்றால் அதை உடைத்து எறியத் தமிழ்க் குமுகாயம் விரைவில் வீறுகொண்டு எழும் நாள் வெகு தூரமில்லை! இன்று தடாவுக்குத் துணைபோகும் வெறிநாய்கள் ஆட்சியாளர்கள் அன்று 'தடாவில்' வரும் நாள் நெருங்குகிறது. பொறுத்திருப்போம்! காலம் வரும். பணி தொடரட்டும் வணக்கம்! —என்றும் அன்புடன், அ.மதனராசன், பம்பாய்.

O :1533 அன்பரீர்! வணக்கம். நலமே சூழ்க. தென்மொழி இதழ் இன்று கண்டேன். தங்கள் ஆசிரிய உரை படித்து இன்புற்றேன். 'துன்பம்' உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை'' என்றவாறு தென்மொழிக் குடும்பம் சுமை சுமந்து செல்வது தெரிகிறது. என் போன்ற தமிழ் நெஞ்சங்கள் எண்ணத்தால் திண்ணியராய்ப் பின் நிற்கிறோம் என்பதே என்னால் சொல்ல இயல்வது. கண்காணாத் துணையாய்த் தொலைவில் பலர் உள்ளனர். தளராது வீறு நடை இடுக.

— அன்பன் க.சந்திரசேகரன், குளித்தலை.

O : 1534 உயர்திரு பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்; ஐயா தங்களின் தமிழீழம், ஆரிய பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள், இனம் ஒன்று பட வேண்டும் ஏன்?, ஓ!ஓ! தமிழர்களே! ஆகிய நூல்களைப் படித்துப் பார்த்தேன். அப்போதுதான் தமிழனின் இழி நிலையையும், அடிமை நிலையையும் உற்று நோக்கினேன். தமிழர்கள் அடிமை நிலையிலிருந்து மீளவும், பகுத்தறிவோடும் தன்மானத்தோடும் வாழவேண்டுமானால் முதலில் பெரியார், பாவேந்தர், பாவலரேறு ஆகியோரின் நூல்களைப் படித்து முதலில் தெளிவுபெற்று, தமிழ்நாட்டு விடுதலைக்கு ஒவ்வொரு தமிழனும் தமிழுணர்வுடன் போராட முன்வரவேண்டும். அப்போதுதான் தமிழ்நாடு தமிழ்நாடாக இருக்கும். அவ்வாறு இல்லையேல் தமிழ்நாடு இந்திய வல்லாண்மையின் கீழ் அடிமைத் தமிழகமாகவே இருக்கும்.

தங்கள் உடல் நலமா! தங்களை நேரில் பார்த்துப் பேச வேண்டும் என ஆவலில் உள்ளேன். இன்றைய அடிமைத் தமிழகத்தின் ஒரே விடுதலைக் குரலாகத் தங்களின் குரல் மட்டுமே ஒலிக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் விடுதலைக் குரல் ஓங்கி ஒலிக்கும். தமிழகத்துக்கு விடுதலை கிடைக்கும். தங்களின் உண்மைத்

— தொண்டன் மு. அ. பொய்யாமொழி. நெல்லிக்குப்பம் 607105

நம் பாவலரேறு ஐயா அவர்கள் 12-5-93 அன்று வழக்குமன்றம் வருகிறார்கள்.

T. 5847

கடந்த 27-1 93—அன்று, தடா' கொடுஞ் சட்டத்தின் கீழ்த் தளைப்பட்டார் நம் ஐயா அவர்கள்!

பாவலரேறு அவர்களுக்கு முதன் முறை போடப்பட்ட பிணையலைச் சிறப்பு நடுவர் மன்ற நடுவர் சித்திக் கடந்த 12-2-93-அன்று மறுத்துவிட்டார்.

17-3-93—அன்று பாவலரேறு ஐயா அவர்கள் சிறப்பு வழக்கு மன்றம் வந்தார்கள். அவரின் சிறைக்காவல் நீட்டிப்புச் செய்யப் பெற்றது.

2-4-93—அன்று பாவலரேறு அவர்களுக்கு இரண்டாம் முறையாகப் போடப்பட்ட பிணையலைச் சிறப்பு நடுவர் மன்ற நடுவர் சௌந்திரபாண்டியன் மீண்டும் மறுத்துவிட்டார்.

தொடர்ந்து...

நம் ஐயா பாவலரேறு அவர்கள் 12-5-93-அன்று வழக்குமன்றம் அழைத்துவரப்பட உள்ளார்கள்.

சென்னை-உயர் வழக்கு மன்ற (High-court) வளாகத்திற்குள் உள்ள இரண்டாம் சிறப்பு வழக்குமன்றத்திற்கு ஐயா அவர்கள் காலை 10-30மணிக்கு அழைத்து வரப்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600 005. (தமிழகம்)